


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ் கொக்குவிலைப்

பிறப்பிடமாகக் கொண்டவரும்,

இலண்டனை இறுதிக்கால

வதிவிடமாகக் கொண்டவரும்,

ஓய்வு பெற்ற கணித ஆசிரியையுமாகிய

## திருமதி சீதாலட்சுமி பாலயோகன்

அவர்கள் இறைபதம் அடைந்தமை

குறித்த

# நினைவு மலர்



**இம்மலரில் சைவத்திருமுறைகள்**
**52ம் பக்கத்தில் ஆரம்பமாகின்றன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாசம் குன்றா வாழ்வு தந்து
வழியெங்கும் ஒளி தந்து
தேசம் புகழும் நிலை தந்து
திரும்புமிடமெல்லாம் நினைவு தந்து
அழியாப் பிறவியில் ஆவல் கொண்டு
ஆன்மாவாகிய சரீரம் நீங்கி
ஆண்டவன் நிழலில் அமரத்துவமாகிய
எங்கள் பாசத்தெய்வம் சீதாலட்சுமியின்
பாதார விந்தங்களுக்கு
எம் கண்ணீர்ப் பூக்களால் மலரஞ்சலி செலுத்துகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருமதி சீதாலட்சுமி பாலயோகன்



அன்னை மடியில்
**27.08.1944**



முருகன் அடியில்
**25.05.2008**

## திதி வெண்பா

வாழ்சர்வ தாரிசேர் வைகாசி பன்னிரண்டில்
சூழ்ஞாயி றோணம் தொடரபரம் - ஊழதனால்
ஆசிரியை யாம்சீதா லட்சுமிநல் லாறுமுகன்
வாசமலர்த் தாள் சேர்ந்தாள் - வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## கணேச சரணம்

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா

விக்ன விநாயக சரணம் கணேசா
சித்தி விநாயக சரணம் கணேசா

சற்குரு சொரூபா சரணம் கணேசா
சித்தி விநாயகா சரணம் கணேசா

பார்வதி பாலா சரணம் கணேசா
பசுபதி புத்திரா சரணம் கணேசா

மோதகப் பிரியனே சரணம் கணேசா
மூஷிக வாகன சரணம் கணேசா (கணேச)

## அம்பாள்

அம்பா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதிபராசக்தி பாலயமாம்
திரிபுவனேஸ்வரி ராஜராஜேஸ்வரி
வேதாந்த ரூபினி பாலயமாம் (அம்பா)
வீணாபாணி விமல சரஸ்வதி
வேதாந்த ரூபினி பாலயமாம் (அம்பா)
சரஸ்வதி பூர்ண கடாட்ஸகி தேவி
வரப்பிரதாயினி பாலயமாம் (அம்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சுமியாய் வாழ்ந்த சீதாலட்சுமி

சத்தி கணபதி சங்கரன் உமாகுகன்
அத்திறம் அவரடி அணைந்து போற்றிடும்
முதியோ ரேனும் பெரியோ ரேனும்
அதிபெரும் ஞானியர் ஆரா யினுமே
இதுபெரும் புதுமையென் றெண்ணுவோர் தாமும்
மதியுடன் மயங்குவர் மக்களின் பிரிவால்
பத்தியின் மிக்கப் பன்னூல் ஆய்ந்து
சித்தியாய் மனத்தைத் திடமுடன் வைத்தநான்
லண்டனில் வாழ்ந்த என்மகள் சீதா
மண்டிய பிணியால் மடக்கிய நோயால்
காலமா னாளெனக் காதினிற் கேட்டமும்
கோலமாய் துன்பத்தில் குழைந்தே மூழ்கினேன்
ஆதியோ டந்தம் அமைந்த எண்ணங்களே
சுருள் சுருளாக திரைப்படம் வருதல் போல
எண்ணி மயங்கினேன் எட்டாத் தூரத்தில்
புண்ணிய வதிசீதா போயினா ளேயென
உள்ளங் கவன்றேன் ஒருபெரும் வரலாறு
துள்ளி யென்முன்னே தோன்றிச் சுற்றியதே.
கொக்குவில் மேற்கில் குலாவிய பெருங்குடி
கைலாச பிள்ளையும் அவர் கைப்பிடித்த
சுந்தரம் மாவும் பெற்ற சுடர்கொடி
செல்வி சரஸ்வதியை திருமணம் புரியென
வல்லபெரி யோர் திருவார்த்தைக் கமைய
இணுவையென் னுறவினர் என்தனை யழைத்து
துணிவுடன் திருமணம் புரிசிற்றம் பலமென
அவர்களின் உரையை அனுபவித் தெனது
அன்னை அண்ணன் சகோதரி தம்பிமார்
உடம்படத் திருமணம் உவந்துசெய் தேனே
அதன்பய னாலே ஆண்டவன் அருளால்
சீதா லட்சுமி செல்வப் புதல்வி
உதித்தனள் நன்றாய் உருகி வளர்த்தோம்
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுங் குழந்தை தாழ்ந்துதாய் மடியிலும்
சார்ந்து என்தோளிலும் தனி விளையாடி
வயதுமுன் நடையும் வாய்ப்பாங் காலத்தில்
அன்னை சரசுவதி அவதியாய் நோயினால்
பின்னப்பட்டு முருகன் பெருந் தாளடைதலும்
சின்னச் சீதாவும் தேம்பி யழுதனள்
குழந்தையைத் தேற்றி கொடுங்கை யெடுக்கிய
அம்மம்மா அம்மப்பா ஆதரவாக
அடியேனும் பிள்ளையின் அவலங்கண் டழுதேன்
அவர்களின் விருப்பில் அடியேன் மறுமணம்
அளவெட்டி யூர்சேர் அருஞ்செல்வி யான
பொன்னம்மா தன்னைப் புரிந்து மணந்தேன்
காலமும் மெல்லக் கடந்து செல்ல
சீதா வளர்ந்து ஆதார மாக
ஆரம்பப் படிப்பை அயற்பள்ளி படித்தபின்
தீரமாய் வேம்படி சென்றுபடித் தனளே
சீதாவின் படிப்பில் ஆதர வளித்தபின்
கணிதபாடம் கற்கஸ் கந்தாவிற் கனுப்பினேன்
ஆண்டிரண் டாக அருமையாய்ப் படித்து
சித்தி யடைந்த சீதா லட்சுமி
பேரா தனையில் படித்தே யுயர்ந்து
நாலாண்டில் வெளியேறி நனிபுகழ் நாட்டினாள்
கணிதபட்ட தாரியாம் கருத்தால் மன்னாரில்
நியமனம் பெற்ற நீண்டஅக் காலத்தில்
தன்னைப்போல் கணித பட்டதாரி யாகிய
கரவெட்டி பாலயோகன் கண்ணிய னென்றே
யாவரும் போற்ற ஏற்ற சந்நிதியில்
மாபெரும் மண்டபத்தில் மங்கல நாண்பூட்டியே
தம்பதி யாகும் தனிப்பெரும் சோடியாய்
கொக்குவில் இந்துவில் கற்பித்து வந்தனர்
அன்னவ ரன்பால் சோபிதா பரதனை
சித்தியாய்ப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தனர்
ஆண்டு சிலவாக அடுத்ததம் தகுதியால்
நீண்டதூ ரம்முள்ள நெடிய கயானாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்த மாக ஒருநால் வருடமாய்
செப்பமாய்ச் சென்று செல்காலம் முடிய
யாழ்ப்பாணம் வந்தனர் எமக்கும் வந்துரைத்தே
வாய்ப்பாக லண்டனை யடைந்தவ் விடத்திலும்
இருபதாண் டின்மேலாக ஏற்ற கணிதமே
உரிய தகுதியாய் ஒருங்கிணைந் திருவரும்
கற்பித்துப் புகழுடன் காலத்தால் ஓய்ந்தனர்
அறிவின் மிக்கார் அக்கா லத்திலே
மகள்சோபி தாவை மதிந்தவர் அதனால்
உயர்பட்டம் பெற்ற ஒப்பில் சசிகுமாருக்குத்
திருமணஞ் செய்து சிறப்பின் பயனால்
ஆதவன் ஆராதன் அகமிகு பேரரை
மாதவத் தால்கண்டு மகிழ்ந்து மகனையும்
மேன்மையாம் கணித வல்லுனராய்
வான்மையாய்ப் படிப்பித்து மேலும் உயர்த்தினார்
ஓய்வுற்ற சீதா ஒவ்வொரு தினமும்
போயுற்று ஸ்ரீமுருகன் பொன்னடி போற்றியும்
கோயில்கள், மடங்கள், கல்லூரி கட்கெலாம்
வாரி வழங்கியும் வந்தார் துணைவர்போல்
தம்பதி யிருவரும் சந்தோச மாக
சகோதரர் போலச் சார்ந்த யாவர்க்கும்
நலமாக வேண்டிய நற்கருமங் கட்கெலாம்
அருமையாய் வேண்டிய யாவையும் அளித்தனர்
எங்கே செல்லினும் எம்மை மறவாது
அங்கங்கே யிருந்து ஆற்றுவார் கடிதங்கள்
எனினும் சீதாவின் இனியதை யாவர்க்கும்
புனிதமாய் பணமோ பொருளும் அளித்திடும்
இனியென்ன செய்யுமோ ஈசா முருகனே
புனிதா நின் திருவடி பொருந்தினாள்
மணியவள் பிறவா மாண்பருள் புரியே
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

அருமைப் பப்பா
புலவர். வை. க. சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் புலம்பல்

**அன்பும் அருளும் அனைத்தும்**
**ஒருங்கே பெற்று**
**துன்பமில்லாப் பெருவாழ்வில்**
**துணையாய் இருப்பேன் என்றுரைத்தீர்**
**இன்பம் பயக்கும் இனிய மொழி**
**இசைக்கும் மக்கள் உவந்திருக்க**
**என்பும் உருக உரைத்த மொழி**
**எல்லாம் மறந்து ஏகினையோ?**

---

என்னில் பாதியானாய், என்னவளே!
எங்கு சென்றாய்?
பொன்னை நிகர்த்த குணப்
பூமானே, போனாயோ
கரம் பிடித்த நாள் முதலாய்
கடைசி நிமிடம் வரை
வரம் பெற்ற மகராசனாய் என்னை
வாழ வைத்த பெண்ணணங்கே
பிள்ளைச் செல்வ மிரண்டு
பேணி வளர்த்தெடுத்து
பேசரிய மருமகனைப் பிரியமுடன் காத்த
கொள்ளை அன்பு காட்ட பேரக்
குழந்தைகள் இரண்டு, இவை
எல்லாவற்றையும் விட்டு
எங்கு சென்றாய், என்னுயிரே!
ஊரிலே நாம் வாழ்ந்து
உயரிய ஆசிரியப் பணி புரிந்தது எல்லாம்
உன்தோழமையின் துணையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாய்ப் புரிந்து வந்தேன்
புலம் பெயர்ந்து வந்தபோது உன்
புறம் பெயரா அன்பொன்றால்
நலம் பெற்று வாழ்ந்து நின்றேன், இனி
நானிலத்தில் என்ன செய்வேன்
நண்பியாய், மந்திரியாய், நல்லாசானுமாய்
பண்பிலே தெய்வமாய் என்னைப்
பார்த்து நின்ற பேரமுதே! இனி
எங்கு சென்று உன்னைத் தேடுவேன்
ஏந்திழையே! உடன்வாராய்
பார்த்த விழி பூத்திருக்க உன்
பசுமை நினைவுகளே என் மீதி
வழி வரையும் விரைந்து வந்தே
என் விழி முட்டும்

அன்புக் கணவர்
**பாலயோகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் சோபிதா, பரதன் புலம்பல்

புண்ணியம் பலவும் செய்து
        புகழுடன் வாழ வைத்தாய்
எண்ணிய கருமம் யாவும்
        எழில்பெற இயங்க வைத்தாய்
கண்ணியமாக எம்மைக் காத்து
        நீ தவிக்கவிட்டு
நண்ணியதெங்கே யம்மா
        நாம் தினம் கலங்குகின்றோம்.

## மகள் சோபிதா புலம்பல்

அம்மா! என் அருமைப் பெருந்தாயே!
இம்மாநிலத்தில் உம்மைப் போலினி யாருண்டு
மூத்த மகவான என்னை முறையாகப் பார்த்தெடுத்து
காத்துக் காத்தெல்லாம் கச்சிதமாய்ச் செய்து
அன்பும் அரவணைப்பும் அயராது எனக்களித்து
துன்பமில்லா வாழ்வு, தொட்டதெல்லாம் பொன்னாக
என்ன நினைத்தாலும் இட்டமுடன் வாங்கித் தந்தே
பொன்னைக் காப்பது போல் என்னைக் காத்த என்னம்மா
எங்கு சென்றீர்கள்? எமைப் பிரிந்து நின்றீர்கள்
தம்பி பரதனையும், என்னையும் தந்தையையும்
நம்பி வந்த நல்லவராம் மருகரையும்
பிஞ்சுக் மழலைகளாம் பேரக்குழந்தைகளையும்
குஞ்சுகளைக் காக்கும் தாய்க்குருவி ஒன்று போல
குறையாது காத்து நின்ற கோமாதே எங்கு சென்றீர்
கடைசி வரையும் உங்கள் பேரக்குழந்தைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் வைத்துக் காத்தீர்கள்

கண்மூடும் நேரத்திலும் எங்கள்

கனவுடனே நீங்கள் சென்றீர்கள்

அம்மாவே! எங்கள் அருமைக் குலவிளக்கே!

அரிய தாயாரே!

உம் அன்பை நினைத்துக் கதறுகின்றேன்

விரைந்து வாரீரோ?

உமக்கு வேண்டும்

பணி செய்ய வேண்டும்

மறைந்து நின்றே எந்தன்

மனம் வெடிக்கச் செய்யாதீர்

அன்பு மகள்

**சோபிதா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் பரதன் புலம்பல்

அம்மா! என் அம்மா! என் அரிய தாயே!
சும்மா சொல்லக் கூடாது, உங்களைப் போல்
சுகமான தெய்வத்தை எங்கும் நான் கண்டதில்லை
அன்பைக் குழைத்து அரவணைத்து அருகிருந்து
பண்பையும் ஊட்டி பக்குவமாய்ப் பாதுகாத்து
துன்பமிலா வாழ்வை துயரம் தராக் கல்வியை
அப்பாவும் நீரும் ஆதரித்து தந்ததனால்
தப்பாது நானும் தரணியிலே ஓரிடத்தை
பெற்றே இன்று நான் பேர் சொல்ல நிற்கின்றேன்
நற்றவத்தால் உங்களை நான் தாயாகப் பெற்றேன்
பெற்றவற்றுள் உங்களைப் போல் பெருஞ்செல்வம் வேறில்லை
கண்கெட்ட காலன் அதைக் தட்டிப் பறித்து விட்டான்
புண்பட்ட நெஞ்சோடு கிடந்து நான் புலம்புகின்றேன்
என் வாழ்வே உம் வாழ்வாய் வாழ்ந்த எந்தாயே
உம் முகத்தைப் பார்க்காது உள்ளமெல்லாம் ஏங்குதம்மா
இசை தந்தீரே! மிருதங்க இசை தந்தீர்
வசை இல்லா வாழ்வு வாழ வாகாய்ப் பழக்கி விட்டீர்!
திசையெல்லாம் தேடுகின்றேன் தெய்வத் திருத்தாயே
விசை கொண்டு வந்திடுங்கள் வேண்டியழுகின்றேன்
இறைவனை வேண்டி நிற்கின்றேன்
என்றுமே உங்களுக்காய் வேண்டி நின்றிடுவேன்

அன்பு மகன்
**பரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருகர் சசிகுமார் புலம்பல்

**அம்மையைப் போல் என்னை**
**அனைத்துமே பரிவு காட்டி**
**இம்மையில் இனிது வாழ**
**எங்களுக் குதவி நின்றாய்**
**தம்மையே தரக்கணிந்து**
**தளர்வுறாக் கொடைகள் நல்கி**
**பொய்ம்மையாம் உலகை நீத்து**
**புகுந்ததும் பொறுக்குமா சொல்!**

---

மாமியே, மாண்பு நிறை மகத்தானவரே!
மருமகனாய் நினைக்காமல் என்னை
மறு மகனாய், மற்றொரு மகனாய்
மாசற்றுக் காத்தவரே!
இன்னொரு தாயாக எனக்கு
இயன்றதெல்லாம் செய்தீரே,
என்னுயிராய் வந்திட்ட நும்மினிய மகளை
என்கையில் தந்திட்ட நாள் முதலாய்
எந்தக் குறையுமின்றி எம்மை வாழ வைத்தீர்
அன்பான மாமா, அருமை மாமி
பாசமிகு மைத்துனன், என்னில் பாதியான என்னவள்
மீதிக்கு அருமை செல்வமிரண்டு
அழகான சுற்றமென அரியதொரு
வாழ்வு தந்த, வானத்து தேவதை நீர்
நல்லுரை பகன்று நல்லவற்றை நாடி
அல்லும் பகலும் எம் அனைவரதும் நன்மைக்காய்
உம்மை ஓடாகத் தேய்த்து
உயரிய பணிசெய்திட்ட உத்தமியே
உம்மை இனிக் காணாது
காலமெல்லாம் கலங்கி நிற்க விதியாச்சே
கண்ணிழந்தே வாடுகின்றோம் எம்
கண்ணீரை நும் காலடியில் வார்க்கின்றோம்

**அன்பு மருகன்**
**சசிகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் ஆதவன், ஆராதன் புலம்பல்

**அன்புடன் தூக்கி எம்மை**
**அணைத்துமே உச்சிமோந்து**
**இன்புடன் இனியதூட்டும்**
**எழிலுறு அருமை அம்மம்மா**
**என்பெலாம் உருக யாரும்**
**உனை நினைந் துருக லுற்றார்**
**துன்பெலாம் துடைக்க நீயும்**
**துணையென ஓடி வாராய்**

---

அம்மம்மா, எம் அம்மம்மா!
அன்பு மிக்க எம் அம்மம்மா!
பட்சமாய் எமமைப் பாதுகாத்தே வளர்த்தீர்(கள்)
இட்டமாய் நாம கேட்டதெல்லாம்
இன்பத்துடன் செய்து தந்தீர்(கள்)
பாசம் மிக்கவராய், எமக்கு ஏதும் என்றால்
பதறித் துடித்திட்டீர்(கள்)
எம்மைப் பார்ப்பதுவும்
எமக்கயலில் இருப்பதுவும்
கைம்மாறில்லா
கருணையாய் புரிந்தீர்(கள்)
உணவு ஊட்டுகையில், எம்மை
உறங்க வைக்கையிலே
கனவுக் காட்சியாய் எம்
கட்டிலில் நீங்கள் இருப்பீர்கள் - இனி
நீங்கள் இல்லா வீடு
தாய்ப் பறவையிலலாக் கூடு போல
நிறைவேயில்லாத கதை போல
அம்மம்மா! எப்ப எம்மைக்
காண வருவீர்கள், காத்திருப்போம்
காத்திருப்போம், காலமெல்லாம் உங்களுக்காய்
காத்திருப்போம்

**அன்புப் பேரப்பிள்ளைகள்**
**ஆதவன் ஆராதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Amma....*

*Although we miss you dearly*
*And your memories will linger forever...*
*How do I explain why you have gone*
*Where you have gone?*
*Who do I turn to when I need to talk?*
*Have we talked so much that it needed to end?*
*Who do I ask for ideas, use as a sounding board or even for cooking tips?*
*Do I need to find myself a new best friend?*
*Who will guide me for the rest of my life?*
*How do I answer why you left so early*
*Especially when your grandchildren want a reason*
*For why their ammamma is no more!*
*Although there are so many questions in my heart*
*That need an answer....*
*You shall always be with me all the way*
*I will hope and pray as Adhav says that*
*You will be looking down on us from above the stars*
*Please be with us all along the way*
*We will show our love through our successes*
*Just as you always wished.*

*Love*
***Sobi***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Amma

When I sit here alone, I think of all the memories... You brought us up in 3 countries, dedicating your life to us. Working as a teacher, but always being there for us. I was a naughty toddler, you wouldn't take me anywhere because you didn't want anyone to say anything bad about me. I remember when you fed me lunch when I came home from school, trying to make me eat, asking me again and again if I wanted one more mouthful, it hurt so much when I had to feed you.

You would teach me maths, encourage me to play music and make me great food. Even when I couldn't drive, you would take me by train to rehearsals. You strived to achieve perfection, in bringing up Acca me, Adhav and Ara, as well as teaching and cooking. It was the love that you added to the recipe that made it so good. Each day of the week you would make something different. When I was ill, you would make me idiyapam and sothi.

When I was little, I would hide behind your saree. You made me a person who could perform in front of hundreds. I could see you were proud, when I played in my Arengetram, each time I played in a concert, when I got my GCSE results, when I got my A-Level results, when I got into Oxford, when I started working, and where I am now. You were the strength that kept me going; I'd want to make you happy.

The numerous days you taught me Maths, you taught me so well, I was able to cover for your lessons. The days you sat with me in Mridangam class and gave me the support and encouragement to do well. The times you watched me playing Mridangam and Veena, always wanting to take a photo or video to remember the event. Now each time I play, I'll strive to give my best performance. You didn't get the chance to


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

learn music but each time you saw me and Acca play, I know it was like you were playing. You taught me thevarams when I was little. I whispered Mridanga jathis, Veena swaras and thevarams at your bedside the night before you left us, and you lay there awake, with a smile on your face.

When I was at university, you would come and see me each week, bringing me food, the food was delicious but it was also great to see you, you would want me to call you every day to let you know I was ok.

You were very modest, never wanting to show off your talents. People just came to know what a great person you were . You would always listen to what someone would have to say, never interrupting anyone until they had finished. Listening, always having a view but never saying anything that would hurt anyone.

In your last days you asked us not to worry about you, but we did, how could we not? It is hard to accept but it is a relief to know that you're not suffering any more.

When I was little, I always did something naughty and cried when you told me off. I had nightmares thinking that one day you may not be here with us. I try to stay strong; your memories are always here with me. Throughout my life, you always did the best for us and didn't want us to have any problems. You wanted to see us happy and even when you were angry, it wouldn't last too long. I look at the future today, hoping to be happy, making you proud, and hopefully the only tears are those of happiness from above.

Yours lovingly,
**Thambi**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Beloved Ammamma

(Adhavan's speech for his Ammamma's final journey on 1st June 2008)

Vanakkam

I am Ammamma's eldest grandson – Adhavan.

I was lucky that Ammamma looked after me for 6 years but my little brother Ara is only 2 and just spent 2 years with Ammamma.

We always loved going to stay with Ammamma. When I was a toddler, I even thought Ammamma's house was mine.

She taught me lots of things, like how to read and write, add and take away and this year, how to multiply and divide. She also told me lots of Tamil stories like Ramayana and Hinduism.

Ara knows how to say the numbers and letters of the alphabet by playing puzzles with Ammamma.

She knew how to get me to do some work and nicely away from the TV.

Ammamma always wanted me to eat. I don't like to eat a lot so she made me all the things that I like, like roti and vaipan. If I refused to eat my food, she will go back into the kitchen and make me something else – my Amma would never do that!

Ammamma made me food and brought it with her when she came to pick me from school with Thatha.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I am very proud of my Ammamma. She has gone to a better place. She is feeling much better now and has no oxygen wires.

But she is not with us and we will all miss her very, very much. She will always be in our hearts to guide me and Ara and watch over us.

Today, I can see that she was not only our Ammamma but also very special to all of you.

We thank you all very much for coming here today. We thank all those who helped us through hard times.

Please pray for our Ammamma so that she will rest in peace in Heaven.

Nandri. Vanakkam.

(Aradhen's understanding of what happened to his Ammamma)

Ammamma is not feeling well.

Ammamma is sleeping.

Ammamma has gone to Appusami.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் பிரிவாற்றாது துயருறும் தந்தை

அரும்பாகப் பிறந்து வளர்ந் தாங்கிலமே மூலமாய்
அழகாய்க் கற்று
சுரும்பாய்நன் முயற்சியினால் தூயவிஞ் ஞானப்பட்ட
தாரியாகி
கரும்பாக ஆசிரியத் தொழில்செய்து கற்பகமாய்க்
கற்பித் தோய்ந்தாய்
அரும்பாவாய் என்மகளே அருஞ்சீதா எனைமறந்தேன்
அயர்த்தா யம்மா

ஆண்டேயிரு பதின்மேலே உனைமறந்தே னதனாலே
அவதிப் பட்டேன்
தாண்டி வருஞ் சிரமத்தால் தனிமகளாஞ் சோபிதாவைத்
தானே விட்டாய்
நீண்டிருந்து எனக்குநீ எழுதுகின்ற கடிதங்கண்டு
நிம்மதி தனையடைந்து
கூண்டிருந்த கிளியென்றே யுனைநினைப்பேன் கோமளமே
குறை கொள்ளாதே.

உத்தமரா முன்கணவர் உன்மக்கள் மருகருடன்
பேரர் போல
நித்தமுனை மறக்காமல் நின்னினைவே காரணமாய்
நினைவாய் வாழ்வேன்
பத்தியுள்ள என்மகளே சீதாவே அவர் போல
பதமாய் வாழ்வேன்
புத்திகொண்டு நீசெய்த பொன்னான உதவிகளை
புரிவேன் போற்றி.

மனத்தாலும் மாசிலா மாமகளே உனைநானே
மறக்க மாட்டேன்
எனைத்தாலும் நானழைத்தால் ஏனென்றுகேட்கிலாய்
இதுவோ நீதி
அனைத்தாலும் பேசாது நீகிடக்க அம்மாவுன்
நிலை யறிந்தேன்
தினைப் போதும் நான்மறவேன் செல்வமே முருகனடி
சேர்வாய் சாந்தி.

- முதுபெரும் புலவர்
**வை.க.சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அக்காவே!

அன்புள்ள எங்களது ஆசையான அக்காவே
துன்புற்றுப் போனோம் துயர்ச்செய்தி கேட்டவுடன்
இன்புற்று நீவாழ்ந்த இனியஎம் காலமெல்லாம்
நின்பற்றி(ய) நினைவுகளாய் நீளுகின்ற தெம்மனதில்

சிறுவயதில் நீ எங்கள் வீடுவரும் போதும்
சிறுவராய் நாம் உந்தன் வீடு வரும் போதும்
யார் இந்த அக்கா எனக்கேட்கும் போதும்
கொக்குவில் அக்காவென்று சொன்னார் எம் பெற்றோர்

பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதும்
பண்போடு ஆசிரியத்தொழில் செய்த போதும்
வெளிநாட்டில் நீசென்று வசித்திட்ட போதும்
மறவாமல் கடிதங்கள் எழுதி வந்தாயே!

அன்பான பப்பா- குஞ்சியம்மா தம்பி
மச்சாள் மாரென்று தவறாமல் எழுதி
உன்பாசம் காட்டி உணர்வு தந்தாயே-இன்று
எம்பாவம் தானோ நீ பிரிந்து சென்றாய்!

அக்காவுனைப் படிப்பித்த தையாவே யானாலும்
அதிகமே அக்காதான் செய்திட்டார் என்றுளம்
அம்மாவும் முன்பொருகால் சொன்னதுவும் என்மனதில்
விம்மலுடன் ஞாபகமாய் எழுகின்ற திப்போது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனியே உன்மறைவு எனைத் துன்பமாக்கியதே
மச்சாள்மார் என்று நீ-விழித்திடுவாய் கடிதத்தில்
எம்மகள் கூடப் படத்தில் தான் உனைக் கண்டாள்
நேரிலே காண்பதற்கு நீயில்லை இன்றுலகில்.

ஆசைக்கோர் அக்காவாய் அன்பைக் காட்டினையே!
அவசியத்தேவைகளில் ஆதரவாய் இருந்தாயே!
என் சுகநலனை எப்போதும் கேட்பாயே!
என் துணைவி சுகம் மகளின் சுகம் கேட்பாயே!
இயலாத வேளையிலும் இயன்றவரை கதைத்தாயே!

சிலநாட்கள் முன்புதான் துணைவியார் ஈசுவுக்கு
சத்திரசிகிச்சை யொன்று சடுதியாய் வந்தபோது
மறக்காது நீயும் காசனுப்பி வைத்தாயே

நன்று நீ செய்ததெல்லாம் நயந்துன்னை நினைக்கிறோம்
என்றுமே அமைதியாய் ஆடம்பரமேயின்றி
குன்றுமேல் தீபமாய் குவலயத்தில் வாழ்ந்திருந்தாய்
இன்று நீயில்லை இங்கு- இறைவனிடம் சென்று விட்டாய்
சென்று நீ முருகன் தாள் சேர்ந்திருப்பாய் சாந்தியுடன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**சி. ஸ்ரீஸ்கந்தராஜா(தம்பி)**
**ஸ்ரீ. லோகேஸ்வரி (மைத்துனி)**
**ஸ்ரீ. ஜெனனி(மருமகள்)(இணுவில். அளவெட்டி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை

## ஸ்ரீமதி. சீதாலட்சுமி பாலயோகன்

தாயகம்: கொக்குவில் வாழ்விடம்: இலண்டன்
பிறப்பு: 27.08.1944 இறப்பு: 25.05.2008

அன்னை சரஸ்வதியின்
அறிவொளியாய் பிறந்தவளே!
இன்னுயிரின் மேலாக
அறிவொளியைக் கொடுத்தவளே!
இன்னுலகில் பாலயோகன்
கரம்பற்றிக் களித்தவளே!
அன்புமிக்க சோபியையும்
பரதனையும் தந்தவளே!
முன்னேற்ற வாழ்க்கையிலே
முதுகெலும்பாய்த் திகழ்ந்தவளே!
என்றென்றும் உடன்பிறப்பாய்
எம்துணையாய் இருந்தவளே!
பன்னெடுந் தூரத்திலும்
பாசத்துடன் நீயிருக்க
கன்னெஞ்சம் படைத்திங்கே
உனைப்பார்க்க காத்திருந்தோம்!
உன்பாச வலையினிலே
எமையெல்லாம் சேர்த்து வைத்து
முன்னே நீ பொன்னுலகம்
புகுந்ததென்ன எம்முயிரே!
உன்னுடலில் உயிர்பிரிய
உறைந்துவிட்டோம் ஒருகணமே!
என்செய்வோம் உன்ஆத்மா
சாந்திபெற வணங்கிடுவோம்!

தம்பி
**சி. சிவானந்தராஜா**
பண்டத்தரிப்பு
01.06.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிலைக்கு ஒளிதந்த சீதா அக்கா

சின்ன வயதிலிருந்தே எனக்கு ஒரு ஆசை. நான் நினைத்த பெயர் தான் எங்கள் வீட்டிற்கு வைக்க வேண்டுமென்பது தான் அது. ஆனால் ஏதோ நிராசையாய்ப் போய் விட்டதாக மனதில் ஒரு ஏக்கம். இந்நிலையில் தான் அக்காவின் ஆதங்கம் தொலைபேசி யில் தவழ்ந்தது. ஹலோ அக்காவா?........சரிசரி. கதையுங்கோ!

"தம்பி! எங்கள் வீட்டிற்கு மிதிலை என்று பெயர் வைக்க நீங்களும் யோசியுங்கோ" என்று சொன்ன மாத்திரத்திலே "மிதிலை" என்று நாமகரணம் சூட்டி விலாசமிட்டேன். மிதிலையிலிருந்து கடிதங்கள் லண்டனுக்கும் மிதிலைக்கும் பறந்தன. அக்கா, அத்தான், பிள்ளைகளென உறவுகள் நீடித்த ஆயுள் பெற்றன. வீடோ பெரிது. வளவோ அதைவிடப் பெரிது. அளவெட்டி, உடுவில், இணுவில், நாவற்குழி, மீசாலை, சிலாபம், கண்டி, நாவலப்பிட்டி என்று இறைவன் தந்த வீடுகள் போன்று கொக்குவில் "மிதிலையும்" தற்காலிகமாக அக்கா அளித்த வரம் என்றுதான் கருத முடிகிறது. தீபாவளி, வருஷம், படிப்பு, மருத்துவம், வீடு திருத்தம் என உதவிய கரங்களுக்கு "அத்தான் மனம் போல,யாம் வணங்குவதும், போற்றுவதும் இறைவன் அளித்த பாக்கியமே. இந்த உலகத்தை வெல்ல வைப்பது பிரார்த்தனை என்ற ஒன்றால் மட்டும் தான் முடியும் என நம்பிய அக்காவுக்கு பணமோ, நகையோ பதவியோ, மாடமோ அவற்றில் அதிகமாகவோ பற்றில்லாத என்னை அக்காவுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

அதனால் அக்கா அத்தானுக்கு ஏதோ என்னில் ஒரு ஆர்வமுள்ள அன்பு. இந்தப் பிடிப்பினால்தான் மிதிலையில் ஸ்ரீராமஜெயம் எழுதிவருகிறோம். "கைலாய- சுந்தர- பால- சீதா" மனம்போல நாம் எளிமையாக ஆடம்பரமில்லாமல் செந்தூர் திருமுருக மந்திரத்துடன் மஞ்சவனப்பதி, நல்லூர், சந்நிதி, சூடுகந்தப்பிள்ளையார், ஐயனார், முதலி கோவில், வைரவ, கும்பழாவளை தெய்வாம்ச துணையோடு ஆரபி, துளசி, வலஜி, ஐயா குடும்பத்தவர்களையும் கல்விச் சிறப்புகளோடு வாழவைத்துள்ளது மிதிலை. பப்பா மிதிலையில் இருக்கவேண்டுமென்ற அக்காவின் ஆசை அக்காவிற்கு ஆத்மசாந்தியை நிச்சயம் கொடுக்கும். அன்புள்ள பப்பா, தம்பிமார், மச்சாள்மார், மருமக்கள் என எழுதுகின்ற அக்காவின் கடிதம் வரும்போது மிதிலை எவ்வாறு ஒளிபெற்றதோ இனி மேலும் அவரது இலட்சுமி கடாட்ச இறைவனடி சேர்க்கையால் மிதிலையும், இலண்டனும் ஒளி பெறுவதாக. வெல்வதாக. ஆன்மபலம் பெறுவதாக. அவரது ஆத்மா தெய்வத்துள் நீடுவாழ வைக்கப்படும்.

**அன்புத்தம்பி குடும்பம்**
**சிற்றம்பலம் சிவஞானராஜா (ஆசிரியர்)**
**கிருஷ்ணவேணி, ஆரபி, துளசி, வலஜி.**

மிதிலை, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு 2008. 06. 08.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள மச்சி

## அவரும் அழ - நான் அழுதேனே

அத்தையே நோயினால் லண்டனிலே
நீள்துயிலை யடைந்தா ரென்று
மெத்த வென் மூத்தமகள் ஆரபி நா
வலப்பிட்டியிலே போனிற் சொல்ல
சித்தம லைந்தே யக்காஎன அவரே சொல்லியழ
நானுமழ சிறியஎன் மகழு மழவே
வித்தகர் மாமா அழவும் அவ்விரவு நிசப்தமாய்
விடிந்ததன்றே

ஆற்றுவா ரில்லாத அந்நேரம் அருமந்த
மச்சி பற்றி
நேற்றுவரை அவரெழுதும் கடிதமுடன்
போன செய்தி கேட்கும் நானும்
தேற்றுவா ரொருவரின்றி திகைத்திடவே
நெஞ்சமுமே திக்கிட்டன்று
போற்றிச் சென்ற இருபதாண் டினைவுகளும்
பொருந்தித் தலை சுழன்றதன்றே

**திருமதி. கிருஷ்ணவேணி சிவஞானராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு நிறைந்த எம் இனிய மாமி

நெடுந் தொலைவில் இருந்தாலும் எம்
நினைவுகளில் ஒன்றி
நெகிழ்ந்தென்றும் உம் அன்பில்
நனைந்தவர் நாம் மாமி
கடல் கடந்து வரும் உங்கள்
மடல் சொல்லும் பாசம்
இடம் விட்டு வந்தாலும் எமை
சூழும் உம் நேசம்
வசந்த காலம் ஒன்றிங்கே
வறண்டு போனது போல்
அழகான கவிதை ஒன்று
அவசரமாய் முடிந்தது போல்
ஏனிந்த அவசரம் எம்
இனிய மாமி உமக்கு?
விழி நீர் சிதறிடினும்
விடையில்லை எவரிடமும்
கண்ணீர் கரைந் தொழுக
கரங்கள் கூப்புகிறோம்
இதயம் கனக்கையிலும்
இறையை இறைஞ்சுகிறோம்
நித்தியமாய் இறையடியில்
அமைதி கொள்வீரென்றென்றும்
நிச்சயமாய் எமக்கெல்லாம்
தோன்றாத் துணையாக.

அன்பு மருமகள்
**ஆரபி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடிப்பெற்ற செல்வம்

இவ்வுலகம் மனித வாழ்வு நிலையற்றது என்ற காரணத்தால் பெருமை பெற்றது என்பதை வள்ளுவர் வாய்மொழியான தமிழ் வேதம் எடுத்துக் கூறுகின்றது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

ஆகவே நிலையற்ற இவ்வுலகில் நிலையானவற்றைச் செய்து தான் மறைந்தும் மறையாத வாழ்வுக்கு வழி செய்தவர் அமரர் திருமதி சீதாலட்சுமி பாலயோகன் அவர்கள்.

அவர் ஒரு புண்ணிய ஆத்மா. ஆதலால் இறைவன் விரைவாகவே தன்னுடன் சேர்த்துக்கொண்டார். எங்களுக்கு இதுவோர் பேரிழப்பு. அன்னார் இவ்வுலகில் இல்லை என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. தொலைவில் இருப்பதால் இன்னும் உயிருடன் இருப்பதாகவே தோன்றுகின்றது. இவர்தம் குடும்பத்தவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர்களை எங்ஙனம் தேற்றுவது? அவர்களின் துன்பத்தில் பங்குகொண்டு எங்கள் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தில் முக்கியமாக அவரது (எங்களதும்) பேரக்குழந்தைகள் தான் பாரதூரமான பாதிப்புக்குள்ளா னவர்கள். குழந்தைப்பருவத்தில் அம்மம்மாவிடம் கிடைத்த, கிடைக்கக்கூடிய, அன்பும் அரவணைப்பும் இல்லாமல் போய் விட்டது. குழந்தைகளின் ஏக்கத்தை யாரால் ஈடு செய்யமுடியும். குடும்பத்தாருக்கு மட்டுமல்ல உறவாடிய நெருங்கிப்பழகிய அனைவருக்கும் தாங்கமுடியவில்லை.

எங்களுக்கு இருமுறைதான் நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் தொலைபேசியூடாக அடிக்கடி உரையாடு வோம். ஆதலால் காலங்காலமாக அவருடன் வாழ்ந்த மாதிரி ஓர் நினைப்பு. 1999ம் ஆண்டு இந்தியாவில் முதன் முதலாக நேரில் சந்தித்தபோதுதான் அவர்களை அறியக்கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, அரவணைப்பு, மற்றவர்களை மதிக்கும் குணாதிசயம், மற்றும் இன்னோரன்ன பெருங்குணம் கொண்டவர்கள் அன்றுமட்டுமல்ல இறக்கும்வரை இத்தகைய அருங்குணங்கள் அவரிடம் நிறைந்திருந்தன.

கல்வியில் திறமையும் புலமையும் மிக்கவர். பெண்களுக்குரிய அத்தனை நற்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர். இப்படியொருவரை நாம் இனிக் காண்பதரிது. எம்முடைய மற்றப் பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போல் பாவித்து நல்வழி காட்டி வந்தார். என்னுடைய சகோதரர்கள் குடும்பங்களுடனும் மிகுந்த வாஞ்சையுடனும் பாசத்துடனும் தான் பழகினார். அவர்களுக்கும் இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எவருடைய பிள்ளையைக் கண்டாலும் அவர்கள் படிப்பு சம்பந்தமாகத் தான் அன்னாரின் சிந்தனை இருக்கும். எல்லோரையும் முன்னேற்ற வேண்டும் என்ற பேரவா. இப்படி எல்லாப் பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற மனித தெய்வத்தை ஆண்டவன் எங்களிடமிருந்து பிரித்து விட்டார். ஆயினும் அன்னார் இறைவனின் பாதார விந்தங்களைச் சென்றடைந்திருப்பார் என்பது நிச்சயம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டி எமது அக வணக்கத்தைச் செலுத்துவதுடன் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர் ஆறுதல் பெறவும் எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாள் அருள் கிடைக்க வேண்டுமென வேண்டு கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எங்கள் இதயங்களில்...

அன்னையின் அரவணைப்பை
அறிந்திடாவிடினும்
அணைத்தாய் அனைவரையும்
அன்புக்கரங்களால், தாயே!
பரிவின் ஈரம் இன்னும் காயவில்லை
பிரிந்தே நீ எங்கு சென்றாய்...?

பாடபோதனைகள் செய்து
சாதனைகள் படைத்திட்ட
பாலயோகன் அவன் (ரகுராமன் உந்தன்)
(பக்க) பலமிழந்து தவிக்கின்றான் சீதா...
சோதிக்க விட்டு நீ எங்கு போனாயோ...?

சித்திரமாய் வளர்த்திட்ட செல்வமகள்
சோபிதா... சோபை இழந்து நிற்க
தேர்ந்தெடுத்த சசியோ - (இன்னுமொரு மகன் உனக்கு)
பசித்திருக்கப் பொறுக்க மாட்டாய்- அவன்
பதைபதைத்தே நிற்கின்றான்
பத்தியங்கள் காத்து
பக்குவமாய் வளர்த்திட்ட
பண்புமிக்க உன் மைந்தன் பரதன்
பரிதவித்தே நிற்கின்றான்
பாராமுகமாய் பறந்துநீ போனதெங்கே

ஊக்குவித்தாய் கல்விதனை
போக்குகக் காட்டி பேரனுக்கு என்ன
சாக்குகள் சொல்லி - நீ
காததூரம் போனாய் - எங்கோ
காத்திருக்கிறான் ஆதவன்
வெகுமதிக்காய்.....?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q for question mark...?
அம்மம்மா எங்கே.... என
உன் பேரன் ஆரா கேட்கின்றான்
என்ன பதில் சொல்வோம்....?
ஆர்ப்பரிப்பில்லா அறிவுக்கடலே
உன்னில் மூழ்கித் திளைத்த முத்தொன்று
திருப்புகழ் பாடி உனை வழியனுப்பியதாம்.
அடக்கம் அமரருள் உய்க்கும் என - நீ
அமர்ந்த இடம் நாமறிவோம்
எனினும்
எங்கள் இதயங்களில் என்றும் நீ
நிரந்தரமாய்...!

- உன் அன்பில் தழைத்த ஓர் உறவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாடு சென்றதேனோ?

அன்புடன் அரவணைத்தாய்
ஆதரவளித்து நின்றாய்
இன்புறு மொழியால் பேசி
இணையிலாப்பெருமை கொண்டாய்
துன்பங்கள் வந்தபோது
துடித்துநீ செய்ததெல்லாம்
இன்று நாம் எண்ணும்போது
இதயத்தைப் பிழியுதையோ

அத்தானும் நீயும் சேர்ந்து
அறிவினைப்புகட்டி நின்றாய்
சத்தான உணவு செய்து
சாப்பிடவைத்து உண்டாய்
முத்தான பரதன் சோபி
மருகராய் எமக்குத் தந்தாய் - எங்கள்
சொத்தான அக்கா நீயேன்
சொல்லிடா தோடிச்சென்றாய்?

துன்பமாம் இடம்பெயர்(வு)த்
துயரது வந்த காலை
அன்புடன் பொருளும் தந்து
ஆதரித்திருந்தாய் அக்கா
இன்னுமோர் ஈர்பத்தாண்டு
இருந்திடுவாய் என்றெண்ண - ஈசன்
தன்பதம் சேரல் வேண்டி
திருநாடு சென்றதேனோ?

"இத்தரை மீது மாந்தர்
இருந்திடார் இறப்பேயின்றி"
தத்துவம் தெரிந்தும் நாங்கள்
தகவுடை அக்கா உன்னை
எப்படி மறப்போம் வாழ்வில்
ஏங்கியே தவிக்கின்றோமே - வாழ்வு
செப்படி வித்தை என்றெண்ணும்
செயல்திறம் எமக்கு உண்டோ

துரை வீதி
இணுவில்

சகோதரன்
வைத்தியலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்ததேன்?

எந்தாய் சீதாலக்சுமி எங்கள் திருவிளக்கே
முந்தியிரு அவையத்தே முனைவன் நீ என்றீர்
தாயன்பு காட்டி தமியேனை நடக்க வைத்தீர்
ஆதரவுக் கரமொன்று அணைத்த களிப்பினிலே
ஏதுண்டு துன்பமென்று எண்ணிக் கிடந்தேனை
தீயுண்டு தீர்க்கும் தீராக் கவலையதில்
மாயென்று சொல்லி மறைந்ததேன் அம்மா?

# முருகனிடம் வேண்டுகிறோம்

அன்பின் திருவுருவாய்
அறத்தினிலே நிலைநின்று
இன்பம் பல துறந்தெம்மை
இவ்வுலகில் ஏற்றிவைத்து
பாசமாய் எம்மிலேயே
பாதியான தெய்வம் நீயே
அந்த லண்டன்ஸ்ரீ முருகனிடம்
இளைப்பாறச் சென்றனையோ?
மாண்டு நீ போனதனால்
மனத்திலே மகிழ்ச்சியில்லை
வேண்டுகிறோம் முருகனிடம்
நீ சாந்தியுடன் சரணடைய!

பாரதிநேயன் சிறீதரன்
சிவபைரவி சிறீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல்

கணிதத்தின் கரைகண்ட தாரகையே!
காலமெல்லாம் கற்பித்து வந்த தூரிகையே!
தூங்கிவிட்டாயோ நீ இன்று?
பாலயோகனின் பௌதீகத் தென்றலே - எம்
பாடசாலைக்கு வந்துதித்த பாக்கியமே! சீதாலட்சுமியே!

கொக்குவில் இந்துவில் கோதை நீ ஆற்றிய
கோலங்கள் தான் எத்தனை? எத்தனை?

நீவிர் கணக்கில் போட்டதோ வர்க்கம்
இன்று கண்டுவிட்டீர் சொர்க்கம் - உம்
மாணவர்க்கு இல்லை இனி மார்க்கம் - நாம்
உமை மறந்திடத் துணியாத வர்க்கம்

கண்ணிலே மைஎழுதி கணிதத்தின் மெய் எழுதி
பொய்யின்றி வாழ்ந்தவரே போயினது மெய்யோ?

அம்பை நீ போய்விட்டதால் அம்போ...
என்றாகி விட்டாரே எம் ஆசிரியர்?
ஆர் இவருக்கு இனி ஆறுதல்? - தேறுதல்
கூறுதலுக்கு எவர் உளார்?
சோபையிழந்த சோபியின் சோகத்திற்கு யார் காரணம்?
பரதனின் பாசத்திற்கும் பரிதவிப்பிற்கும் பதில் என்ன?
அம்மம்மா எங்கே? எனக்கேட்கும் ஆதவன் - ஆராதனிற்கு
ஆர் இனி ஆறுதல் கூறுவர்? ஆர்வத்துடன் அணைப்பர்?
அன்புடன் அமுதினைக் கொடுப்பர்
சசிகுமாரின் சடுதியான சோகத்திற்கு என்ன காரணம்?

எங்கள் Teacherஐ எண்ணி இனி நாம் என்னத்தை சொல்ல?
எவ்வாறு இதை எழுத? எப்படி இனிப்படிக்க
எங்கனம் இதை முடிக்க? எப்படி இதை எடுக்க?
சொல்ல - எழுத - படிக்க எடுக்க - முடிக்க
இனி எமக்குத் தெரியாது - ஐயோ! இனி
எம்மாலே அது முடியாது

நீங்கா நினைவுகளுடன் ஈழத்தான்
ந.அ. திவாகரன்( மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமுருகன் துணை

# இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயம்

இறைவன் கொடையாய் வழங்கிய மனிதப்பிறவியை பயனுள்ளதாகச் செய்து அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி தெய்வமாய் எல்லோரும் வணங்கும்படி வாழ்ந்து மறைபவர் மிகச்சிலரே. தான் கற்ற கல்வியை, சேர்த்த செல்வத்தை, அனைவருக்கும் வழங்கி, ஆதரவற்றோரை அரவணைத்து, இல்லறக்கடமைகளை இனிதாக நிறைவேற்றி, இறைவனடி சேர்பவர்கள் என்றென்றும் போற்றத்தக்கவர்கள்.

தமிழீழம் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கில் பிறந்து வளர்ந்து, கற்றுத் தேர்ந்து திரு சூரிப்பிள்ளை பாலயோகன் அவர்களை மணந்து சோபிதா, பரதன் என இரு மொட்டுக்களை ஈன்று, நாட்டின் அவலங்களைக் கண்டு, மனம் நொந்து இந்நாட்டிற்கு வந்த பின்னும், இல்லறக்கடமைகளை இனிதாய் நிறைவேற்றி, அன்புக்கணவனுக்கு உறுதுணையாய், பிள்ளை களுக்கு நல்லதொரு தாயாய் விளங்கி, சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் குறிப்பாக மாணவ சமுதாயத்திற்கும், தமிழ் மொழிக்கும் தொண்டாற்றி, மறைந்தவர் திருமதி சீதாலஷ்மி பாலயோகன் அவர்கள்.

எமது பிள்ளைகள் தாயை இழந்து தடுமாறிய நேரத்தில் உதவிகள் பல செய்து, எந்தவித பிரதிபலனையும் எதிர்நோக்காமல் கல்வி கற்பித்து, அவர்களை மேம்படுத்தியவர் திரு திருமதி பாலயோகன் தம்பதிகள்.

லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் திருவிழாக்களில் உபயதாரராகப் பங்கேற்று நிதி வழங்கித் தொண்டாற்றி மகிழ்ந்தார்கள்.

கணவருக்கு நிலையில்லா வாழ்க்கைத் துணைவியாய் விளங்கிய திருமதி சீதாலஷ்மி பாலயோகன் அவர்கள், அவரையும், பிள்ளைகளையும், அனைவரையும் தவிக்க விட்டு, துயரத்தில் மிதக்கவிட்டு, இறைவனடி சேர்ந்த அமரர் சீதாலஷ்மி பாலயோகன் அவர்கள் ஆத்மா சாந்தியடைந்து என்றென்றும் முருகப்பெருமான் திருப்பாதக்கமலங்களில் இளைப்பாற வேண்டியும், அவரது பிரிவால் துயருறும் திரு பாலயோகன் திரு பரதன் திருமதி சோபிதா சசிகுமார் மற்றும் பேரப்பிள்ளைகள் உறவினர்கள் அனைவரும் துயர் நீங்கி அமைதி பெற வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஆலய சிவாச்சாரியார்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
**சைவ முன்னேற்றச் சங்கம் (UK)**
"சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை"
**SAIVA MUNNETTA SANGAM (UK)**
"Community Service Through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel / fax: 020 8514 4732 Fax: 01268 561805
E.mail: smsuk77@yahoo.co.uk

## இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

எப்போதும் சிரித்த முகம், இன்சொல், அனைவருக்கும் உதவும் உள்ளம் இவைதாம் திருமதி சீதாலட்சுமி பாலயோகன் அவர்களை நினைக்கும் பொழுது எம் மனக்கண்ணில் தோன்றுகின்றது.

இவர் தாம் வாழும் காலத்தில் தமது குடும்பத்திற்கு மட்டுமல்லாது, தம்மைத் தேடிவந்து உதவிகேட்டவர்களுக்கும் மனமுவந்து வாரி-வழங்குவதில் பின்நின்றதில்லை. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியராக கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், கயானாவிலும், இங்கிலாந்திலும் பணியாற்றி பல பட்டதாரிகளை உருவாக்கினார். ஒரு ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார். அவர் ஒரு ஆசிரியராக மட்டு மல்லாது தனது மாணவர்களை தனது பிள்ளைகளைப் போல் கவன-மான தாயன்புடன் கல்வி புகட்டினார். அவரிடம் கல்வி கற்றவர்கள் இன்று பல நாடுகளிலும் மேன்மையாக வாழ்கின்றார்கள். இவரது குடும்பத்தினர் அனைவரும் எமது சங்கத்துடன் நீண்டகாலமான உறவுகொண்டவர்கள். பிரிக்க முடியாத பாசப் பிணைப்புடன் எமது சங்கத்தை சீராட்டி வளர்ப்பவர்கள்.

இவரது பிரிவால் துயருறும் கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
ஆட்சிக்குழுவினரின் சார்பில்
தர்ம. இரவீந்திரமோகன்
கௌரவ பொதுச்செயலாளர்

15-06-2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ு

# SIVA POOMI SCHOOL

# சிவபூமி பாடசாலை

## (SCHOOL FOR LOW INTELLIGENT CHILDREN)

## சிறுவர் மனவளர்ச்சிப் பாடசாலை

பணிப்பாளர் சபை
கோண்டாவில்.

T.P: 021 2227938

Kondavil East,
Kondavil

**Board of Directors**

**President**
*Mr. Aru Thirumurugan*
Vice Principal
Skandavarodaya College,
Chunnakam.

**Vice President**
*Mr. K. Sivaji*
Principal
Skandavarodaya College,
Chunnakam.
*Mrs. K. Kugathasan*
Kondavil.

**Secretary**
*Mr. N. Sathasivaiyar*
Asst. Registrar General,
Kachcheri, Jaffna.

**Asst. Secretary**
*Mr. P. Srivigneswaran*
Principal
Navaly Maha Vidyalayam.

**Treasurer**
*Dr. S. Kugathasan*
Eye Surgeon,
Teaching Hospital,
Jaffna

**Asst. Treasurer**
*Mr. M. Vijayaragunathan*
Accountant,
Teaching Hospital,
Jaffna.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்** 30/05/2008

# இதய அஞ்சலி

<u>சிவபூமி குடும்பம் சார்பாக ஸ்தாபகர் செஞ்சொற்செல்வர்.திரு ஆறு.திருமுருகன் அவர்களின் பிராத்தனை உரை</u>

கல்வியிலும் கடவுள் பக்தியிலும், தர்மசிந்தனையிலும் நிறைவுபெற்ற குடும்பத்தின் தலைமகன் திரு.பாலயோகன் அவர்களின் பாரியார் திருமதி.பாலயோகன் அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து மிகவும் வேதனையடைகின்றோம். லண்டனில் பெருமையோடு வாழ்ந்த இப்பெருந்தகையின் மேன்மை பற்றி உவ்விடம் வாழும் அவரது அன்பர்கள் கூறும்செய்திகள் வெளிப்படுத்துகின்றன. கல்வியில் உயர்ந்தவராக கருணைப்பணிகளில் அக்கறை கொண்டவராக விளங்கிய திருமதி.பாலயோகன் அவர்களின் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம் அன்னாரின் வாழ்வு சிறக்க சிறந்த வாழ்கைத்துணை நலமாக விளங்கிய அவரது கணவருக்கும் அருமைப்பிள்ளைகளுக்கும் எமது ஆறுதல்கள் உருத்தாகுக. சிவபூமிக்கு தாங்கள் செய்த தர்மப்பணி என்றும் நன்றியோடு நினைவுகூரப்படும். அவரது ஆசியோடு உங்கள் வாழ்வு தொடர பிரார்த்தித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

ஆறு. திருமுருகன்
............................................ 30-05-2008
திரு.ஆறு.திருமுருகன்.
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை,

ARU THIRUMURUGAN
PRESIDENT
SIVA POOMY TRUST
KONDAVIL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

ஆல விருட்சமொன்றின்
அடி வேராய் நின்றீர்கள்
பால யோகன் என்னும்
பண்புடைய வேந்தனுக்கு
கால மெல்லாம் தொண்டு செய்யும்
கடமை புரிந்தீர்கள்
ஞால முள்ளளவும்,
நல்லவர்கள் உள்ளளவும், உங்கள்
வாழ்வு நினைக்கப்படும்,
வரலாறாய் எழுதப்படும்
தாழ்வு உயர்வு இன்றி,
தரணியிலே எல்லோரும்
நல்லாய் வாழவென உம்
நாயகனைப் போல் நினைத்து நின்றீர்
சொல்லாய் கழியாது,
உங்கள் வாழ்வு சொல்லப்படும்
இலண்டன் வந்து விட்டால்
உங்கள் இனிய
இல்லம் ஏகாமல்
என்றும் நான் ஊருக்கு
இன்று வரை மீண்டதில்லை
உங்கள் கையால் விருந்துண்ட
உணர்வு இன்னும் போகவில்லை
வீட்டுத் தோட்டம் உங்கள்
ஊர் வீட்டைப் போலிருக்க வேண்டி
நாட்டம் கொண்டுமே நல்ல
விதை தேடி நட்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல குடும்பத்தின்
ஒப்பற்ற நாயகியாய்
வல்ல கணவனுக்கு ஓர்
வடிவான துணையாய்
சொல்லரிய பிள்ளைகளுக்கு
சோதிமிக்க தாயாய்
கல்லா மழலைக்
கனியூறல் கலந்து கொஞ்சிச்
சொல்லாலுருக்கி அழுதோடித்
தொடந்து பற்றும்
பேரப்பிள்ளைகட்குப்
பேசரிய பேத்தியாய்
இன்னும் பல பணி செய்த
ஏற்றம் மிக்கீர் உம்
இன்னுயிர் இறைவன் திருத்தாள்களில்
என்றும் இணைந்தே நிற்கும், என்
இதய அஞ்சலியை ஏற்றருளும்.

**தமிழ்மாமணி, தமிழருவி த. சிவகுமாரன்** B.A.(Hons)
(தலைவர், வவுனியா மாவட்டத் தமிழச் சங்கம்,
சிரேஷ்ட ஆசிரியர்
(வவுனியாத் தமிழ்த் தேசிய கல்லூரி-இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Message from Dr. K. Ramachandran***

Dear Sobitha,

We are very sorry to hear about your mum. She has been a wonderful neighbour to us, a lovely mum to you and your brother Barathan and a sincere friend to many. We will all miss her.

She was one of the brilliant students in our village and we thought she would make an excellent medical doctor with her powerful brain, helpful nature and kind heart. But she became a popular teacher and produced many doctors, engineers, lawyers, scientists with her dedication to teaching. Unfortunately God has not been very kind to her in spite of her noble qualities. However she has produced two great children, you and Barathan to serve our community and others.

Needless to say that the vacuum created by her loss will never be filled. We share with you and your family the sorrow due to her loss. May God give you, Barathan and your dad Balayogan the strength to accept this great loss.

**Kanagasabai Ramachandran**
Anaicottai Road
Kokuvil


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் நிழலே சீதா

மாலைப்பொழுது சீதாலட்சுமியின் தம்பியார் வீட்டிற்கு வந்து "அக்கா சீதா" என்றுதான் சொன்னார். அவரும் அடுத்த சொல்லைச் சொல்ல முடியாது தவித்தார். நான் உடனே அவர் மரணமாகி விட்டார் என்பதை உணர்ந்தேன். உணர்ந்ததும் அதிர்ச்சியடைந்தேன். காரணம் சீதா என்று செல்லமாக அழைக்கும் அவளை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அவள் ஊருக்கு வருவாள் அவளைப் பார்க்க வேண்டும். அவளோடு கதைக்க வேண்டும் என்றெல்லாம் ஆவலாக இருந்த எனக்கு இந்தச் செய்தியைக் கேட்டதும் தாங்க முடியவில்லை. அவளுக்கு இறுதி மரியாதை செலுத்தும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லையே எனக்கவலையடைந்தேன்.

எண்ணும் எழுத்தும் கற்கத் தொடங்கிய காலம் முதல் நாம் இருவரும் ஒன்றாகவே படித்தோம். பின்னர் நாம் இருவரும் கற்ற பாடசாலைகள் வேறுபடினும் எம் இருவருக்கும் இடையில் இருந்த நட்பு பல்கலைக்கழகம் வரை சென்று பின்னரும் தொடர்ந்தது. நட்பிற்கு அப்பால் நாம் உறவினரும் கூட. இதனால் இன்றுவரை இவளோடும் இவளது உறவுகளோடும் பழகும் வாய்ப்புண்டு. இப்பவும் அவர்களின் இல்லத்துக்கு செல்லும் போதெல்லாம் இவளைப் பற்றி விசாரித்து பழைய விடயங்களையும் ஞாபகப்படுத்தி வருவதுண்டு.

அடக்கமும் அமைதியும் பொறுமையான சுபாவமும் கொண்டவள் சீதா. குறிப்பாக ஆரம்ப காலத்தில் இருந்தே கணிதத் துறையில் மிகுந்த தேர்ச்சி பெற்று விளங்கினாள். பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியப் பணியில் ஈடுபட்ட இவள் கணிதத் துறையில் பல கல்விமான்களை உருவாக்கினாள்.

இவள் உடலால் எம்மை விட்டு நீங்கினாலும் எம்நட்பின் நினைவுகள் என்றும் என்நினைவில் ஆழமாக நிலைத்திருக்கும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களை பணிந்து துதிக்கிறேன். நன்றி

அன்பு நண்பி

**மனோண்மணி ஸ்ரீபதி**

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிர்த் தோழிக்குச் சமர்ப்பணம்

1963ம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான எங்கள் நட்பு இன்றுவரை எந்தவித தடையுமன்றி வளர்ந்து கொண்டே இருந்தது. தூரத்தில் பிரிக்கப்பட்டிருந்தாலும் எண்ணத்தில் எப்பொழுதும் என்னுடன் வாழ்ந்தவள் என் நண்பி. பல்கலைக் கழகத்தில் ஒரு கணிதமேதை அவள். நானோ சாதாரண கலைப்பிரிவு மாணவி. இருந்தாலும் கூட எங்களுக்குள் ஒரு ஆழ்ந்த நட்பு. சிறு வயதில் தாயை இழந்த அவள் மேல் எனக்கு தனியானதோர் அனுதாபம்.

அந்த அனுதாபமே நாளடைவில் நட்பாக மாறி எங்களை உயிர்த் தோழிகளாக்கியது. விரிவுரை நேரம் தவிர மற்றைய நேரங்களில் எங்களைத் தனியாகக் காணமுடியாது. பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்து அவள் திருமணம் செய்து கொண்டாலும் கூட வந்தவர் எனக்கு ஏற்கனவே தெரிந்தவர் என்பதால் எங்கள் நட்பில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

எனது கஷ்ட நஷ்டத்தில் இருவருமே பங்கு கொண்டார்கள். என் உயிர் உள்ளவரை அவள் நினைவு என்னை விட்டு நீங்காது. ஏனெனில் எங்கள் நட்பு "முகநக நட்பன்று'. அவளது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சு கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்புத்தோழி

**ருக்மணி மகேந்திரன்**

(ஓய்வுபெற்ற திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியை அமரர் திருமதி சீதாலட்சுமி பாலயோகன் B.Sc

முதுபெரும் புலவர் எனத் தமிழ்கூறும் நல்லுலகோரால் புகழ்ந்து போற்றப்படுபவர் ஆசிரியர் வை.க.சிற்றம்பலம் அவர்கள். அன்னாரது ஏக செல்வப்புதல்வியும் ஆசிருயர் திரு பாலயோகன் அவர்களின இனிய வாழ்க்கைத்துணைவியுமாகிய திருமதி சீதாலட்சுமி அவர்களின் இழப்பு கல்வித்துறைக்கே ஓர் பேரிழப்பாகும். கொக்குவில் இந்துக்கல்லூரியில் அவர்கள் ஆசிரியராகப்பணி புரிந்த வேளை எமது புதல்வர்கள் உட்பட பல மாணவர்கள் கல்வியில் முன்னேற்ற மடைந்தனர். அவரது தந்தையாரும் எனது பெருமதிப் புக்குரிய ஆசிரியப்பெருந்தகை என்றளவில் சில வரிகள் எழுத விழைந்தேன்.

"தம்மின் தம்மகக்ள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்கெல்லாம் இனிது"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க வாழ்வாங்கு வாழ்ந்து தந்தையை அன்றி அழையத்தாரையும் உவப்பச்செய்த உத்தமி. அவரது இழப்பால் துயருறும் அவரது கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தந்தையார், சகோதரர், சுற்றத்தார், யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆ.சுப்பிரமணியம்

கனடா
06.06.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Mrs. S. Supramaniam

The demise of Mrs. Seethaluxmi Balayogan has left a void in her family and in her sphere of education. Seetha was a teacher at Kokuvil Hindu College and earned a good name as a teacher of Maths, Applied and Physics. Mr. Balayogan was also a teacher at Kokuvil Hindu College.

Seetha was a soft-spoken person, a good and kind teacher, well-liked and respected by her students and members of the staff. She is kind and gentle to all who came into contact with her and won their love and respect.

After they moved to London, England, Seetha continued her teaching career. Her students liked her very much and improved their standard of education under her guidance. Her passing away is a great loss to Mr. Balayogan, her daughter and son, to her grand children, her father, to her students and relatives.

Seetha has lived a good life. We pray for her soul to attain peace and rest at the feet of God.

Mrs. S. Supramaniam
Retired Deputy Principal
Kokuvil Hindu College
Jaffna
June 10, 2008

3010, Lawrence Ave. East
Apt. 416, Scarborough
Ontario, M1P 4Y6
Canada


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.06.2008

அன்புள்ள பாலயோகன் மாஸ்டர் அறிவது,

சீதா அக்கா இறந்த செய்தி பத்திரிகையில் பார்த்து மிக்க கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

என்போன்ற எத்தனையோ பேரை சமூகத்தில் மிக உயர்ந்த நிலைக்கு, உருவாக்கிய மிகவும் மதிப்பிற்குரிய ஆசிரியை.

6 மாதத்திற்கு ஒருமுறை தமிழ்க் கடைக்கு மிளகாய்த் தூள் வாங்கப் போவதுண்டு. 07.06.2008 அன்று கடையில் 1ம் திகதி வீரகேசரி விற்பனைக்கு இருந்தது. அதையும் வாங்கிக்கொண்டு புகையிரத நிலையத்தில் பத்திரிகையில் சீதா அக்கா இறந்த செய்தியைப் பார்த்ததும் மிகவும் கவலை அடைந்தேன்.

சீதா அக்காவின் திறமைக்கும், உயர்ந்த குணங்களுக்கும், அவரின் நினைவுகள் என்றுமே எங்கள் நெஞ்சில் பசுமையாக நிறைந்திருக்கும்.

திரு க. சுந்தரகணேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சிந்தனையில் சீதா Teacher

ந. அ. திவாகரன்

எமது ஆசிரியை அமரர் திருமதி சீதாலஷ்மி பாலயோகன் அவர்கள் எல்லோராலுமே அறியப்பட்ட, விரும்பப்பட்ட உயர்ந்த உள்ளம் படைத்த ஒருவர் என்றால் அது மிகையாகாது. நான் அவரிடம் கல்வி கற்றதனை ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

நான் யாழ் கொக்குவில் இந்துவில் கல்வி கற்றபோது Master, Teacher இருவருமே எமக்குப் பாடங்கள் சொல்லித் தந்தார்கள். கணிதத்தையும், பௌதீகத்தையும் இருவருமே படிப்பித்தார்கள்.
Teacher அவர்கள் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் மாணவியாக இருந்து பின்பு அங்கும் சிறிது காலம் ஆசிரியையாக கடமையாற்றினார்.

1972இலிருந்து 1984வரை தொடர்ந்து 12 வருடங்களாக இருவரும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் சேவை செய்தனர். பின்பு 1984இல் Guyana சென்று அங்கும் 1988வரை கடமையாற்றி னார்கள். 1988இல் இலண்டனுக்கு வந்தார்கள். 1988இல் Eastham High Street இல் Teacher family யைப் பார்த்து நான் மகிழ்ந்து எனது வீட்டிற்கு அழைத்துச்சென்றது எனக்கு இப்போதும் மனதில் நிழலாடுகின்றது. அன்று முதல் இன்று வரை நான் இக்குடும்பத்துடன் மிகவும் நெருக்கமாகவும் பழகி வருகின்றேன். எனது புதல்வர்கள் சான்றோன், மேலோன் இருவருமே தற்போது Masterஇடமே படித்தும் வருகின்றார்கள்.
Teacher அவர்கள் தொடர்ந்தும் London Geoffrey Chaucer School இல் கணித ஆசிரியையாக கடமையாற்றியதும் நீங்கள் யாபேரும் அறிந்ததே.

எனக்கு இப்போதும் நினைவில் உள்ளது என்னவென்றால் 1974ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். அப்போது ரீச்சர் சுகமில்லாமல் அதாவது மூத்த மகள் சோபிதாவைக் கருவுற்றிருந்தார். பின்பு சிறிது காலம் செல்ல சோபியையும் சிறுமியாகக் கல்லூரிக்கு அழைத்தும் வருவார். Master சிற்றிடைவேளையின் போது கொக்குவில் சந்தையில் மீன் வாங்கி கொண்டுபோய் வீட்டில் கொடுத்துவிட்டு வருவார்.

பாலயோகன் Master மாணவர்களிடம் கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்வார். இடைக்கிடை மாணவர்களுக்கு அடிகளும் விழுவதுண்டு. எல்லாம் எங்களின் நன்மைக்குத்தான். ஆனால் Teacherரோ அடிக்கவோ பேசவோ மாட்டா. இருந்தும் Masterன் பயத்திலோ என்னவோ மாணவர்கள் அனைவருமே Teacherன் வகுப்பிலும் அமைதியாகவும், ஒழுங்காகவும் நடந்து கொள்வார்கள். Teacher வகுப்பிற்குள் வந்தால் அந்த 40 நிமிடமும் என்னென்று போவதென்றே தெரியாது. ஒரே படிப்புத்தான். சில நேரங்களில் double period உம் இருக்கும். ஆனால் வகுப்பு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காகவே நடைபெறும். சில சமயங்களில் எங்களின் விளக்கக் குறைபாட்டினால் Teacherக்கு சிறிது கோபம் வந்தாலும் கூட அவ கோபப்பட மாட்டா. மாறாக இலக்கிய தோரணையில் எங்களிடம் "தாங்கள் என்ன செய்கிறீர்கள்? தங்களிற்கு விளங்கி விட்டதா?" என நகைச்சுவை யாகக் கேட்பார்.

எனது மூத்த மகன் சான்றோனிற்கு சரியான கவலை. ஏனெனில் அவர் தான் A/L இற்கு Teacher இடம் படிக்க வேண்டுமென்று வெகு ஆவலாக இருந்தவர். அடிக்கடி எனக்கு சொல்லியுமுள்ளார். ஆனால் விதி வழிதான் கதை நடக்கும் நாமொன்றும் அறியோம் பராபரமே!

இங்கு வீட்டில் Master வகுப்பு எடுக்கும்பொழுது Teacher ஹாலில் TV பார்த்துக்கொண்டிருந்தாலும் Class இல் என்ன நடக்கின்றது என்பதனை அவதானித்துக் கொண்டே இருப்பா.

மாஸ்டர் யாரையாவது சிறிது உறுக்கிப் பேசினாலும் பிறகு மாஸ்டர்இற்கு Teacherஇடம் ஒரே பேச்சுத்தான். Teacher இறப்பதற்கு முதற்கிழமையும் Master வகுப்பில் எனது இளைய மகன் மேலோனுடன் ஏதோ சத்தம் போட்டுவிட்டார் என்று Teacher Masterக்கு ஒரே அறிவுரைதான். Master இப்பவும் எனக்குச் சொல்வார் "எட இனி இவனை பேசவே ஏலாது. ஏனெனில் தனக்கு அவவின் நினைவு தான் வரும்" என்று.

எது எப்படி இருப்பினும் எமது பாலயோகன் Teacherஇன் மறைவு எம்மால் ஈடுசெய்ய முடியாததொன்று. ஆனால் என்னவோ Teacher இருந்து கஸ்டப்படுவதிலும் பார்க்க அவ அமைதியாகப் பிரிந்து செல்வதும் ஒரு விதத்தில் எம்மால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதே என்று எம்மை நாமே தேற்றிக் கொள்வோமாக.

Master இற்கும் மகள் சோபிக்கும் பரதனிற்கும் மருமகன் சசிகுமாரிற்கும் பேரன்கள் ஆதவன், ஆராதன் ஆகியோருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலைகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம். என்ன ஓராள் முன்னுக்கு போனால் நாங்கள் பின்னால் போவம். ஆக நேரம் தான் வித்தியாசம். ஆனால் விதி வலியது! ஒன்றுக்குமே கலக்கமோ கவலையோ வேண்டாம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரத் திருமுறைகள்


| பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1.1ம் திருமுறை | - தோடுடைய செவியன்... | 52 |
| 2. 2ம் திருமுறை | - வேயுறுதோழி பங்கன் | 54 |
| 3. 3ம் திருமுறை | - நிரைகழல் அரவம் | 57 |
| 4. 4ம் திருமுறை | - தலையே நீ வணங்காய் | 60 |
| 5. 5ம் திருமுறை | - மாசில் வீணையும் | 62 |
| 6. 6ம் திருமுறை | - இடர்கெடுமாறெண்ணுதியே | 64 |
| 7. 7ம் திருமுறை | - நத்தார்படை | 67 |
| 8.8ம் திருமுறை | - திருவாசகம் | 69 |
| 9. 8ம் திருமுறை | - சிவபுராணம் | 70 |
| 10. 8ம் திருமுறை | - திருவெம்பாவை | 73 |
| 11. 8ம் திருமுறை | - திருப்பள்ளியெழுச்சி | 78 |
| 12. 9ம் திருமுறை | - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | 81 |
| 13.10ம் திருமுறை | - திருமந்திரம் | 82 |
| 14.11ம் திருமுறை | - திருவாக்கும், விநாயகனே | 83 |
| 15.12ம் திருமுறை | - பெரியபுராணம் | 84 |
| 16. திருப்புகழ் | - கைத்தல, பக்தியால், இறவாமல்... | 86 |
| 17. திருப்புகழ் | - முத்தைத்தரு | 87 |
| 18. திருப்புகழ் | - நாதவிந்து கலா | 88 |
| 19. கந்தசஷ்டிக் கவசம் | | 90 |
| 20. வேல்முருகா வேல்முருகா | | 97 |
| 21. வேல்முருகா மால்மருகா | | 98 |
| 22. பச்சைமயில் வாகனனே | | 99 |
| 23. அன்பருக்கு அன்பரே | | 100 |
| 24. அபிராமி அந்தாதி | | 101 |
| 25. அபிரா | ... கலையாத கல்வியும் | 102 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரத் திருமுறைகள்

**பொருளடக்கம்** **பக்கம்**


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| 26. நயினை நாகபூசணி அம்பாள் பாடல்கள் | 103 |
| 27. சக்தி - மாதா பராசக்தி | 106 |
| 28. ஸ்ரீ காளி தோத்திரம் | 107 |
| 29. ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் | 108 |
| 30. ஸ்ரீ மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்திரம் அயிகிரி | 109 |
| 31. துக்க நிவாரண அஷ்டகம் | 110 |
| 32. ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம் | 112 |
| 33. சுத்த சக்தி ஓம் சிவம் | 114 |
| 34. ஓம் சக்தி ஓம் - சுந்தரவதனி | 115 |
| 35. கற்பகவல்லிநின் | 116 |
| 36. சகலகலாவல்லிமாலை - வெண்டாமரை | 117 |
| 37. சரஸ்வதி தோத்திரம் - வெள்ளைத் தாமரை | 119 |
| 38. மங்களம் | 121 |
| 39. திருப்பொற்சுண்ணம் | 122 |
| 40. உடற்கூற்றுவண்ணம் பட்டினத்தார் பாடல் | 127 |
| 41. பட்டினத்தார் பாடல் - எத்தனை, ... | 131 |
| 42 பட்டினத்தார் பாடல் -அன்னைக்கு இறுதிக்கடன் ... | 132 |
| 43 பட்டினத்தார் பாடல் -பிறந்தன. கல்லாப் பிழையும் .. | 134 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்[1]
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்[2] கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூரும்மிவனென்ன
அருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 5

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
இறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
உயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்கும்முலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானும்
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளீர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. 10

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் திருமுறை

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொ டாமை யிவைமாம் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்குடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவள மேனி ஒலிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல
அடியாரவர்க்கு மிகவே

மதிநுதல் மங்கை யோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்லஅவை நல்ல
அடியாரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி சந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரியுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வஉடைவர்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இரந்து
மடவாள்த னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபட வேட மாகும் பரன்நரி பாகன்
பகவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெ ருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மானும் மறையோடும் தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

கொத்தவர் சூழலி யோடு விரயற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
புத்தரொ டமனை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை இடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொ ணாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அமியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்குங்
கோணை மாமலை அமர்ந்தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணை மாமலை அமர்ந்தாரே. 2

பனித்திளந் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணை மாமலை அமர்ந்தாரே. 3

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்து அவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளம்
செம்பொன்னு மிப்பியும் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோண மாமலை அமர்ந்தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பார் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந்தாரே 5

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன் உயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண ம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலை அமர்ந்தாரே 6

(ஏழாவது பாட்டு மறைந்து விட்டது)

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
கொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமாமலை அமர்ந்தாரே 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலையேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஓள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகடல் வணங்கக்
கோண மாமலை அமர்ந்தாரே 9

நின்றுண்ணுஞ் சமணும் இருந்துண்ணும் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடு முடனாகித்
துன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொன் கானல் வாசம்வந் துலவும்
கோண மாமலை அமர்ந்தாரே 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோண மாமலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழரர் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாம் திருமுறை

தலையேநீவணங்காய் — தலை
மாலைதலைக்கணிந்து
தலைபாலேபலிதேருந்தலைவனைத்
தலையேநீவணங்காய். 1

கண்காள்காண்மின்களோ — கடல்
நஞ்சுண்டகண்டன்றன்னை
எண்டோள்வீசிநின்றுடும்பிரான்றன்னைக்
கண்காள்காண்மின்களோ. 2

செவிகாள்கேண்மின்களோ — சிவன்
எம்மிறைசெம்பவள
எரிபோன்மேனிப்பிரான்றிறமெப்போதும்
செவிகாள்கேண்மின்களோ. 3

மூக்கேநீமுரலாய் — முது
காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை
மூக்கேநீமுரலாய். 4

வாயேவாழ்த்துகண்டாய் — மத
யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றனை
வாயேவாழ்த்துகண்டாய். 5

நெஞ்சேநீநினையாய் — நிமிர்
புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலைமங்கைமணாளனை
நெஞ்சேநீநினையாய். 6

கைகாள்கூப்பித்தொழீர் — கடி
மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை*யார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர். 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கையாற்பயனென் — னரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்
ஆக்கையாற்பயனென். 8

கால்களாற்பயனென் — கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென். 9

உற்றாராருளரோ — வுயிர்
கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக்
குற்றாராருளரோ. 10

இறுமாந்திருப்பன்கொலோ — வீசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்று*
இறுமாந்திருப்பன்கொலோ. 11

தேடிக்கண்டுகொண்டேன் — றிரு
மாலொடுநான்முகனும்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே
தேடிக்கண்டுகொண்டேன். 12

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் திருமுறை

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்[1]
மூசுவண்டறைபொய்கையும்[2]போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே. 1

நமச்சிவாயவேஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவேநானறிவிச்சையும்
நமச்சிவாயவேநாநவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிகாட்டுமே. 2

ஆளானார்க்காளானாரை[3]யடைந்துய்யார்
மீளாவாட்செய்துமெய்ம்மையுணிற்கிலார்
தோளாதசுரையோதொழும்பர்செவி
வாளாமாய்ந்துமண்ணாகிக்கழிவரே. 3

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந்தூர்முனிபண்டமே. 4

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரனாமநவில்கிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. 5

குறிகளும்மடையாளமுங்கோயிலும்
நெறிகளும்மவர்நின்றதோர்நேர்மையும்
அறியவாயிரமாரணமோதிலும்
பொறியிலீர்மனமென்கொல்புகாததே. 6

வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுபாவை நல்லார் திறம்விட்டு நான்
தொழுதுபோற்றி நின்றேனையுஞ்[1] சூழ்ந்துகொண்
டுழுதசால்வழியே[2] யுழுவான் பொருட்
டிழுதைநெஞ்சமி தென்படுகின்றதே. 8

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவுநீருங்கண்டு
நக்கு நிற்பரவர் தம்மை நாணியே. 9

விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் திருமுறை

**திருச்சிற்றம்பலம்**

இடர்கெடுமாறெண்ணுதியேனெஞ்சேநீவா
வீண்டொளிசேர்கங்கைச்சடையாயென்றும்
சுடரொளியாயுள்விளங்குசோதீயென்றுந்
தூநீறுசேர்ந்திலங்குதோளாவென்றும்
கடல்விடமதுண்டிருண்டகண்டாவென்றுங்
கலைமான்மறியேந்துகையாவென்றும்
அடல்விடையாயாரமுதேயாதீயென்று
மாரூராவென்றென்றேயலறுநில்லே. 1

செடியேறுதீவினைகடிரும்வண்ணஞ்
சிந்தித்தேநெஞ்சமே[1] திண்ணமாகப்
பொடியேறுதிருமேனியுடையாயென்றும்
புரந்தரன்றன்றோடுணித்தபுனிதாவென்றும்
அடியேனையாளாகக்கொண்டாயென்று
மம்மானேயாரூரெம்மரசேயென்றும்
கடிநாறுபொழிற்கச்சிக்கம்பாவென்றுங்
கற்பகமேயென்றென்றேகதறுநில்லே.[2] 2

நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவா
நித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப்
புலர்வதன்முன்னலகிட்டுமெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித்
தலையினாற்கும்பிட்டுக்[3] கூத்துமாடிச்
சங்கராசயபோற்றிபோற்றியென்றும்
அலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதீயென்று
மாரூராவென்றென்றேயலறுநில்லே. 3

புண்ணியமுநன்னெறியுமாவதெல்லா
நெஞ்சமேயிதுகண்டாய்பொருந்தக்கேணீ
நுண்ணியவெண்ணூல்கிடந்தமார்பாவென்று
நுந்தாதவொண்சுடரேயென்றுநாளும்
விண்ணியங்குதேவர்களும்வேதநான்கும்
விரைமலர்மேனான்முகனுமாலுங்கூடி
எண்ணரியதிருநாமமுடையாயென்று
மெழிலாரூராவென்றேயேத்தாநில்லே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைத்தநாளெல்லைகடப்பதன்று[4]
வீரவிறெடுநண்பகலுமேத்திவாழ்த்திப்
பிழைத்ததெலாம்பொறுத்தருள்செய்பெரியோயென்றும்
பிஞ்ஞகனேமைஞ்ஞவிலுங்கண்டாவென்றும்
அழைத்தலறியடியேனுன்னரணங்கண்டா
யணியாரூரிடங்கொண்டவழகாவென்றும்
குழற்சடையெங்கோனென்றுங்கூறுநெஞ்சே
குற்றமில்லையென்மேனுன்கூறினேனே. 5

நீப்பரிய[1] பல்பிறவி நீக்கும்வண்ண
நினைந்திருந்தேன்காணெஞ்சேநித்தமாகச்
சேப்பிரியாவெல்கொடியினானேயென்றுஞ்
சிவலோகநெறிதந்தசிவனேயென்றும்
பூப்பிரியா நான்முகனும்புள்ளின்மேலைப்
புண்டரிகக்கண்ணானும்போற்றியென்னத்
தீப்பிழம்பாய்நின்றவனேசெல்வமல்குந்
திருவாரூராவென்றேசிந்திநெஞ்சே. 6

பற்றிநின்றபாவங்கள்பாற்றவேண்டிற்
பரகதிக்குச்செல்வதொருபரிசுவேண்டில்
சுற்றிநின்றசூழ்வினைகள்வீழ்க்கவேண்டிற்
சொல்லுகேன்கேணெஞ்சேதுஞ்சாவண்ணம்
உற்றவருமுறுதுணையுநீயேயென்று
முன்னையல்லால்லாருதெய்வமுள்கேனென்றும்
புற்றரவக்கச்சார்த்தபுனிதாவென்றும்
பொழிலாரூராவென்றேபோற்றுநில்லே. 7

மதிதருவனெஞ்சமேயுஞ்சுபோக
வழியாவதிதுகண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியேயாரமுதேயாதீயென்று
மம்மானேயாரூரெம்மையாவென்றும்
துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச்
சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா
கற்பகமே[2] யென்றென்றேகதறுநில்லே. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தைப்பற்றறுக்கலாகுநெஞ்சே
பரஞ்சோதீபண்டரங்காபாவநாசா
தேசத்தொளிவிளக்கேதேவதேவே
திருவாரூர்த்திருமூலட்டானாவென்று

---

நேசத்தைநீபெருக்கிநேர்நின்றுள்கி
நித்தலுஞ்சென்றடிமேல்வீழ்ந்துநின்று
ஏசற்றுநின்றிமையோரேறேயென்று
மெம்பெருமானென்றென்றேயேத்தாநில்லே. 9

புலன்களைந்தாலாட்டுண்டுபோதுபோக்கிப்
புறம்புறமேதிரியாதேபோதுநெஞ்சே[1]
சலங்கொள்சடைமுடியுடையதலைவாவென்றுந்
தக்கன்செய்பெருவேள்விதகர்த்தாயென்றும்
இலங்கையர்கோன்[2] சிரநெரித்தவிறைவாவென்று
மெழிலாரூரிடங்கொண்டவெந்தாயென்றும்
நலங்கொளடியென்றலைமேல்வைத்தாயென்று
நாடோறுநவின்றேத்தாய்நன்மையாமே. 10

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் திருமுறை

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக் கேதீச்சரத்தானே. 1

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமா வுறை கின்றான்திருக் கேதீச்சரத்தானே. 2

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 3

கரியகறைக் கண்டனநல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லார் திருக் கேதீச்சரத்தானே. 4

அங்கத்துறு நோய்கள்அடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத்தானே. 5

வெய்யவினை யாயஅவ் வடியார் மேலொழித்தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத்தானே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்துறு நோய்கள்அடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத் தெயிறணிந்தான்திருக் கேதீச்சரத்தானே. 7

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டு வண்டாலும் பொழில்மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத்தானே. 8

மூவரென விருவரெனமுக்கண்ணுடை மூர்த்தி
மாவின் கனிதூங்கும் பொழில்மாதோட்டநன்னகரில்
பாவம் வினையறுப்பார் பயில்பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான் திருக்கேதீச்சரத்தானே. 9

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன்னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ் செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புக ழூரன்ன டித்தொண்டன் உரைசெய்த
குறையாத்தமிழ் பத்துஞ் சொலக் கூடாகொடுவினையே

10

திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் திருமுறை

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்களுத் தருளுவ தினியே

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே**

**பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்**
**பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருவண்ணாமலையில் அருளியது

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோவன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம் ஆர் ஏலோர் எம்பாவாய் 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமையெல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியார் எல்லாரும்வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருகயாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக்குறையில் துயுல் ஏலோர் எம்பாவாய். 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மால் அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீகடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியாள்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 06

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உனற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரை யனின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07
கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர்உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைத்துடையான் பொற்பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தி யிருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழா மாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடி சூர்கொன்றை தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவாநெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்மலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்பை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
யென்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்ப
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள்சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
பொற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருபெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருபெருந் துறையுறை சிவபெரு மானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கண் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணருநின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
        ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
        விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
        வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
        கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
        போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
        திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
        படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
        ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

**ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே**
**உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !**
**தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே !**
**சித்தத்துள் தித்திக்கும் தேனே !**
**அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !**
**அம்பலம் ஆடரங் காக**
**வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்**
**தொண்டனேன் விளம்புமா விளம்பே !**

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து பவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

**பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்**
**பாற்கடல் ஈந்த பிரான்**
**மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்**
**மன்னிய தில்லைதன்னுள்**
**ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்**
**பலமே இடமாகப்**
**பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் திருமுறை

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரான் அடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கரிய தோர் பேறிழந் தாரே

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராந் திருமுறை

திருவாக்குஞ் செய்கருமங்கை கூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும் பெருக்கு - முருவாக்கு
மாதலால்வானோருமானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங்கை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்குமண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனித்து

உன்னையொழியவொரு வரையுநம்புகிலேன்
பின்னையொருவரையான்பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பாவானோர் கொடியவினைதீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே

முருகனேசெந்தி முதல்வனேமாயோன்
மருகனேயீசன்மகனே யொருகைமுகன்
றம்பியேநின்னுடைய தண்டைக்காலெப்பொழுதும்
நம்பியேகை தொழுவேனான்

சிந்தனை செய்ய மனமமைத்
தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்
தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற்
கிவையான் விதித்தனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாந் திருமுறை
## சேக்கிழார் நாயனார்
அருளிச் செய்த
# பெரியபுராணம்

என்று வழங்கும்
## திருத்தொண்டர் புராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்

மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் 'திருநடம்கும் பிடப்பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம்என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர்சொரியக் கைம்மலர்உச்சிமேற்குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி! என்ன.

அண்டர் பிரானும் தொண்டர் தமக் கதிப னாக்கி "அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடையநினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியுலுறைபவ
கற்பக ஞுமனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகள்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே!
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா!
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடு
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே!

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேச குமரேசா
கறையானைக் கிழையோனே கதிர்காமப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தைத்தரு பத்தித்திருநகை
யத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர   வெனபோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரும்
முப்பத்துமூ வர்க்கத்தமரரு  மடிபேணப்

பத்தத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மத்தைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாகப்

பத்தற்கிர தந்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சத்தகுபொருள்
பட்சைத்தடன் ரட்சித்தருளுவ   தொருநாளே

தித்தித்தெய ஒத்தப்பரிபுர
நிர்த்தப்பதன் வைத்துப்பயிரவி
திக்கொக்க நடிக்கக்கழுகொடு   கழுதாடத்

திக்குப்பரி வட்டப்பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக்களமிகை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென   முதுகூகை

கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகரி
குத்துப்பட வொத்துப்பொரவல பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதவிந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசோ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமி நமோநம வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
யோக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீர நமோநம கிரிராஜ

தீப மங்கள் ஜோதி நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதியந்தவு லாலாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நன்னாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளு மத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மனவாளப் பெருமாளே.

ஏறுமயில் ஏறிவிளை யாடும்முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவண பவ

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும்கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டிகவசந்தனை

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரன்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியுங்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றேன் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணி முடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்(று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க
முன்கை இரண்டும் முரண் வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இததுன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரமும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலற மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திக ழொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒழிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த, இனிய வேல்முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவின் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலார் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலான் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்த முதளித்த
குபேரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட் கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல்முருகா வேல்முருகா

வேல்முருகா வேல்முருகா
வேல்முருகா வடிவேலழகா
வேல்முருகா வேல்முருகா
வேல்முருகா வடிவேலழகா

கந்தா கடம்பா வேல்முருகா
கதிர்காம வேலனே வேல்முருகா
(வேல்முருகா)

சூரசம்காரா வேல்முருகா
சுப்ரமண்யனே வேல்முருகா
(வேல்முருகா)

நால்வேதப்பொருளோனே வேல்முருகா
நல்லூர்க்கந்தனே வேல்முருகா
(வேல்முருகா)

மாயோன் மருகனே வேல்முருகா
மாவைக்கந்தா வேல்முருகா
(வேல்முருகா)

சங்கரன் மைந்தனே
சந்நதிக் கந்தா வேல் முருகா
(வேல்முருகா)

வள்ளி மணாளனே வேல்முரகா
வடிவேலழகா வேல்முருகா
(வேல்முருகா)

கைலை மலைநாதா வேல்முருகா
கதிர்காம வேலா வேல்முருகா
(வேல்முருகா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல் முருகா

1. வேல் முருகா மால் மருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள் வா வா ஷண்முகா

2. நால் வேதப் பொருளான நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா ஷண்முகா
செல்வமாக சிவை அணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என் தேவே ஷண்முகா

3. ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலை தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சிவனே ஷண்முகா

(வேல் முருகா)

நாறுமாலை யணிமார்பா நாயகா ஷண்முகா

4. நாதவிந்த கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹனனே ஏந்தலே ஷண்முகா
நிறணிந்தார் வினைபோக்கும் நீதமே ஷண்முகா

(வேல் முருகா)

5. பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முத்தனே ஷண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார் உள்ளக் குஹையமர்ந்த ஆனந்தா ஷண்முகா

(வேல் முருகா)

6. வீடும் நாடும் நின்திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும் மனம் உன்னைநாட ஆடிவா ஷண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா ஷண்முகா

(வேல் முருகா)

7. எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா ஷண்முகா
எங்கும் நிறை அன்புருவே ஏ முருகா ஷண்முகா
தில்லையிலே ஆடும்தேவி பாலகா ஷண்முகா
திருட்டுத் தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா ஷண்முகா

(வேல் முருகா)

8. தொல்லையெல்லாம் கடந்த பாதம் தந்திடாய் ஷண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் ஷண்முகா
கல்யொத்த மனமுருக கருணை செய் ஷண்முகா
கல்லென சிலம்பொலிக்க ஓடிவா ஷண்முகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை மயில் வாகனனே

பச்சை மயில் வாகனனே சிவ
பால சுப்ரமணியனே வா - இங்கு
இச்சை எல்லாம் உன் மேல் வைத்தேன்
எள்ளளவும் ஐயமில்லையே (பச்சைமயில்.........

கொச்சை மொழியானாலும் - உன்னைக்
கொஞ்சிக் கொஞ்சிப் பாடிடுவேன்
சர்ச்சை எல்லாம் மறைந்ததப்பா - இங்கு
சாந்தம் நிறைந்ததப்பா (பச்சைமயில்.......

வெள்ளமது பள்ளந்தனிலே பாயும்
தன்மை போல உள்ளந்தனிலே - நீ
மெள்ள மெள்ள புகுந்து விட்டாய் எந்தன்
கள்ளமெல்லாம் கரைந்ததப்பா (பச்சைமயில்....

நெஞ்சமிதில் கோவில் அமைந்தேன் அதில்
நேர்மை என்னும் தீபம் வைத்தேன் - நீ
செஞ்சிலம்பு கொஞ்சிட வா முருகா
சேவற் கொடி மயில் வீரா (பச்சைமயில்......

ஆறுபடை வீடுடையவா எனக்கு
ஆறுதலைத் தருந்தேவா - நீ
ஏறுமயில் ஏறிவருவாய் - முருகா
எங்கும் நிறைந்தவனே (பச்சைமயில்.....

அலைகடல் ஓரத்திலே எங்கள்
அன்பான சண்முகனே - நீ
அலையா மனந் தந்தாய் - உனக்கு
அனந்த கோடி நமஸ்காரம் (பச்சைமயில்.....

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பருக்கு அன்பனே!

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடை யாய் வா வா முருகா
இன்மய யோதியே நீ வா வா முருகா
ஈசன் உமை பாலகனே வா வா முருகா
உலக நாதன் மருகனே வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவளே வா வா முருகா
எட்டுக் குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக்கு இயைவனே நீ வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளி வேலா வா வா முருகா
ஓங்காரத் தந்துவமே வா வா முருகா
ஔவைக்கு உபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடி வா நீ வா வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## கணபதி காப்பு

தாரமரர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்தனேஉல(கு) ஏழும்பெற்ற
சீரபி ராமி அந் தாதிஎப்போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியேநிற்கக் கட்டுரையே

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமிஎன்றன் விழுத்துணையே

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலரப்பூங்
கணையும் கரும்புச் சிலையுமென்பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரியாவ(த) அறிந்தனமே.

அறிந்தேன் எவரும் அறியாமறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர்பெருமை எண்ணாத
கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நர குக்குறவாய மனிதரையே

பூத்தவளே புவனம்பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவளே உன்னைஅன்டி மற்றோர்தெய்வம் வந்திப்பதே

மணியே மணியின் ஒளியெஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தேஅமரார் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவ நெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமிலா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழாலாள் அபிராமி கடைக்கண்களே .

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்குசபாசங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்(கு) ஒரு
தீங்கில்லையே

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை. ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தோத்திரப் பாடல்கள்

## ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் பாடிய நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை

### காப்பு

ஐம்புலனோ டாணவத்தை அறமிதித்து
அன்பர்தனக் கின்பந் தந்து
உம்பருல கரசியற்கும் திருமாற்கும்
வரமருளே ரம்பா வென்று
வம்பலையக் கயமுகனார் சிரமரிந்து
அமரர்குல வாழ்வாய் வந்த
அம்பலவா ணானந்த விநாயகன்தாள்
பரவிவினை யகற்றி வாழ்வோம்

### நூல்

கற்பகக் கன்றைக் கடம்பனைத்
தந்த கனகவரை
அற்புத மோன அருளாழி
ஞான அமிர்த வல்லி
தற்பரை வாமம் தழைத்தே
சரம சராதிதரு
நற்பதி யேஎனைப் பெற்ற
சதானந்த நாகம்மையே 1

பெற்றதாய் பார்க்கப் பிள்ளையான் வருந்திப்
பிறப்பெனும் சாகரத்தாழ
நற்றவமில்லா என்னை நீ விட்டால்
நியாயமோ நல்லுரையாகச்
செற்றவக் கரைமி லேறியான் உய்யத்
துணைஉனை யன்றியா ருளர்சொல்
கற்றவர்க் கினியாய் நிமினாயம் பதிவாழ்
கண்மணி நாகபூஷணியே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை அமலை அரியவர்க் கெட்டா
ஆரணி பூரணி கௌரி
நம்பினோர்க் கின்பம் தருமனோன் மணியே
நற்றவரோ டுறவாக
வெம்பி வாடாதுன் சேயேனைச் சேர்த்து
விடுவதுன் கடன்வினை நீக்கித்
தம்பிரான் மோன சற்குரு போகம்
தந்தருள் நாகபூஷணியே 3

தந்தருள் ஞான சாதனம் சத்தியம்
தவறிலா நெறிபொறை அறிவு
பந்தமால் எய்யாப்பக்தி பேரன்பு
பகலிரவுன் அரவிந்த
அந்தமே யில்லா அடியிணை மாறா
தருள்புணர்ந் தோங்கு நற்றியான
சிந்தையாய் மோன தேசிகன் திருத்தாள்
சேர்த்தருள் நாகபூஷணியே 4

சேர்த்தருள் அன்னே தீவினை கழியச்
ஜெனனமு மரணமு மொழியக்
காத்தருள் என்னை நின்கையில் தந்தேன்
கருணையே ஒளிவிழி பரப்பிப்
பார்த்தருள் ஈன்ற பகவதி ஆயி
பங்கயத் தாள்முடி
நீத்தருள் பாவ நிலைகெட மோன
நிலையருள் நாகபூசணியே 5

பாவமே விளையும் பாழ்வினை ஏதும்
பற்றிடா திருக்க நின்பாலே
தாகமே மறவா தோர்நிலை பக்தி
தண்ணளி வள மருள் ஞான
யோகமே உதவி உலகெலா மீன்ற
உத்தம ருக்குற வாகிப்
பாகமே நீங்காப் பரபரா னந்த
பதமருள் நாகபூஷணியே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழரு
காரணி நாரணன் தங்காய்
மற்றவ ரிறியா மரகத வரையின்
வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ நிலையின் சேயெனை இருத்தி
நாதநா தாந்தமும் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணா னந்த
முத்திதா நாகபூஷணியே 7

முத்தியாங் கரையைப் பற்றி நானுய்ய
முன்னதாய் முரணணலை மோதி
வற்றிடா மாய வாரிதி யதனில்
மயங்கி வீழ்ந் தாழ்ந்திட வாறு
சத்தியாய்ச் சிவமாய்த் தனிப்பரம் தானே
தானுமாய் நின்ற தற்பதையே
சித்தெலாம் வல்லாய் சேயெனைக் காத்தாள்
திருமணி நாகபூஷணியே 8

காத்தெனையாளும் கனகமா வரையே
கமலையும் காயையும் மருங்கே
நீத்தவர் அமரர் கருடகெந் திருவத்
நின்பணி புரிபவர் அன்னே
வேர்த்தவ ராய் நின் றுயிர்த்திர ளாட்டு
வினையெலாம் பற்றி நீறாகப்
பார்த்தருள் விழியைப் பரப்புதி என்ற
பார்ப்பதி நாகபூஷணியே 9

பார்ப்பதி யேக பதியரன் பங்கி
பங்கயச் சிருட்டிபல் லுயிர்க்கம்
கார்ப்பதி பதியாய்க் கதிதரு கங்கா
நங்கையே கருணைமா கடலே
சீர்ப்பதி யாகித் தெளிவுற ஈன்ற
சேயென உணர்த்தி ஈத்து என்றே
பார்த்துள ராதாண்ட டருள்புரி ஞான
அம்பிகை நாகபூஷணியே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி

## பராசக்தி

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே
(மாதா பராசக்தி)

## வாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக்குதவிடுவாள்
ஆணிமுத்தைப்போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்டதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

## ஸ்ரீதேவி

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே(மாதா பரா

## பார்வதி

மலையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாய் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே - மாதா பரா

## இலக்குமி துதி

கமலை திருமறு மார்பன் மனைக்கிழத்தி
செங்கமலக் கையாய் செய்ய
சிமலை பசுங்கழை குழைக்கும் வேனிலான்
தனையீன்ற விந்தை தூய
அமுத கும்ப மலர்கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமிரம் அகன்றிட ஒளிரும் செழுஞ்சுடரே
எனத் துதிப்போர் சிந்தை சேர்வோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமகள் துதி

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்ப தெல்லாம் நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வதிலே
பெருமையுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கை யெல்லாம் வெற்றிகொண்டே
உத்தமநிலை சேர்வ ரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய்யோடீ!
சுடர் மணியே ! திருவே!
மெத்த மையல் கொண்டு விட்டேன்
மேவிடுவாய், திருவே!

## ஸ்ரீ காளி ஸ்தோத்திரம்

யாது மாகி நின்றாய் - காளீ!
எங்கும் நீநி றைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி தாயே! என்மீ
தருள் புரிந்து காப்பாய். (யாது)

எந்த நாளும் நின்மேல் - தாயே!
இசைகள் பாடி வாழ்வேன்!
கந்த னைப்ப யந்தாய் - தாயே!
கருணை வெள்ள மானாய்!
மந்த மாரு தத்தில் - வானில்
மலையி னுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்று மன்றே! (யாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு துணை

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் - பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் - ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

கணபதி ராயன் - அவனிரு
காலைப் பிடித் திடுவோம்
குணமுயர்ந்திடவே - விடுதலை
கூடி மகிழ்ந்திடுவோம் (ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

சொல்லுக் கடங்காவே - பரா சக்தி
சூரத் தனங்க ளெல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பரா சக்தி
வாழியென்றே துதிப்போம் - (ஓம் சக்தி ஓம்)

வெற்றி வடிவேலன் - அவனுடைய
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ! - பகையே!
துள்ளி வருகுது வேல் (ஓம் சக்தி ஓம்)

தாமரைப் பூவினிலே - சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே - கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம் (ஓம் சக்தி ஓம்)

பாம்புத் தலைமேலே - நடஞ் செயும்
பாதத்தினைப் புகழ் வோம்
மாம்பழ வாயினிலே - குழலிசை
வண்மை புகழ்ந்திடு வோம் (ஓம் சக்தி ஓம்)

செல்வத் திருமகளைத் திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெல்லாந் தருவாள் - நமதொளி
திக்க னைத்தும் பரவும் (ஓம் சக்தி ஓம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்திரம்

அயி கிரிநந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி - நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய் ஹே மஹிஷாஸுர-மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

ஸுரவர-வர்ஷிணி துர்தர தர்ஷினி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர-தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ-நிரோஷிணி திதிஸுத ரோஷிணி
துர்மத சோஷிணி ஸிந்து ஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப
வனப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
ச்ருங்க நிஜாலய மத்யகதே
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

கமலதலாமல கோமல காந்தி
கலாகலிதாமல பாலலதே
ஸகலவிலாஸ கலாநிலயக்ரம
கேலி சலத்கல ஹம்ஸகுலே
அலிகுல ஸம்குல குவலய மண்டல
மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

கனகலஸத்கல ஹிந்து ஜலைரநு
ஸிஞ்சிநுதேகுண ரங்கபுவம்
பஜதி ஸ கிம் ந சசீ குச கும்ப
தடீபரிரம்ப ஸுகாநுபவம்
தவசரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர-மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதிஅணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

கான்உறு மலர்எனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தான்உறு தவஒளி தார்ஒளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாள்
மான்உறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில்வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறைஒலி கூவிடப்
பண் பணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமர்அது செய்தநல்
சக்திஎனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

எண்ணியபடியே அருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

ஜெயஜெயபாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீதுர்க்காதேவி அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமெ
ஹறநஹற தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவிமணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண் மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கை யளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சி யளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்த சக்தி ஓம் சிவம்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்த சக்தி ஓம் சிவம்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்த சக்தி ஓம் சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்

சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம்

வேதசாஸ்திர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம் (சு)

வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சு)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்

மஹாமந்ர யந்த்ர தந்த்ர வசியசக்தி ஓம்சிவம்(சு)

யோகபோக தயாசக்தி லோகசக்தி ஓம்சிவம்

தாகமோஹ சோகரஹிததபோசக்தி ஓம்சிவம்(சு)

துஷ்ட சத்துரு நாசசக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்

அஷ்டலஷ்மி ஞானவாணி அமர சக்தி ஓம்சிவம்(சு)

குஞ்சிதபத அபயஹஸத வாஞ்சிதபல தாயகம்

குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்சிவம்(சு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சக்தி ஓம் - சுந்தரவதனி

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தரவதனி சுகுண மணோகரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குஞ்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்களநாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிய
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதீஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் வீரமணி ஐயரின்

## கற்பக வல்லிநின்

கற்பக வல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வா யம்மா (கற்பக)

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட(கற்பக)

நீ இந்த வேளை தன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌனம் அம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா!

எல்லோருக்கும் இன்பங்கள் எழிலாள் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினேனம்மா (கற்பக)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராயிது தருணம்
பாகேஸ்ரீ தாயே பார்வதியே - இந்த
லோகஸ்வரி நீயே உலகினில் நீ துணையம்மா( கற்பக)

அஞ்சன ரமயிடும் அம்பிகையே எம்பிரான்
கொஞ்சிக்குலாவிடும் வஞ்சியே உன்னிடம் - அருள்
தஞ்சம்என அடைந்தேன் தாயே உன் சேய்நான்
ரஞ்சினியே ரட்சிப்பாய் கெஞ்சுகின்றேன் அம்மா (கற்பக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்க்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைப்பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும்பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித் தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோள்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெயவ முளதோ கசல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி பாரதியார் பாடிய

## சரஸ்வதி தோத்திரம்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் -வெள்ளைத்

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள் -வெள்ளைத்

வஞ்சமற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மயிர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம் -வெள்ளைத்

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றோரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். -வெள்ளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்..!
சேர்ந்திடத் தேவை வணங்குவம் வாரீர்..!
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழி ய..திங் கெளிதன்று கண்டீர்..!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன் மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம். -வெள்ளைத்

வீடு தோரும் கலையின் விளக்கம்
வீதி தோரும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ருரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் -வெள்ளைத்

ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிறு றொளிபெறு நாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியின் ஒளிமிருந் தோங்க. -வெள்ளைத்

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்...!
ஓங்குகல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ...!
போன தற்கு வருந்தல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்...! -வெள்ளைத்

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி ளொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைத் கெழுத்தறி வித்தல் -வெள்ளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்...!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்...!
அதுவு மற்றவர் வாய்ச் சொல் அருளீர்...!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்...!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்...!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப் பெருந் தொழில் நாட்டுவர் வாரீர்...! -வெள்ளைத்

உ

## மங்களம்

சங்கராய சங்கராய மங்களம் மங்களம்
சங்கரீ மனோஹராய சரஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்த சக்தி மங்களம் ஸர்வசக்தி மங்களம்
சீதா ராம மங்களம் ராதா கிருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப் பொற்சுண்ணம்

1. முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

2. பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

3. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம்நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

4. காசணிமின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடற் பொற் சுண்ணம் இடித்துநாமே.

6. உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

7. சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடகமெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே

8. வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

10. முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

11. மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

12. மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையரவ வல்குல் மடந்தை நல்லீர்
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

14. சங்கம் அரற்றச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிச்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

15. ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நலத்தைதந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

16. ஆவகை நாமும்வந் தன்பாதம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்லச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமகள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

18. அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

19. வட்ட மலர்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
கிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடி
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

20. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினர்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாயமுற்றும் ஆயினர்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்குப்
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

### உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாதும் ஒருவனு மாகி
இன்பசு கந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசு ரோணித மீது கலந்து
பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைக ளென்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம கன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளு மறிந்து
மகளிர்கள் சேனை தரவணை ஆடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளி நகையூறல் இளமட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாஇரு போஎன நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குருஉப தேசம்
முத்தமி ழின்கலை யும்கரை கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூபன் இவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சம்திகழ் கொங்கை
மருவ மயங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுத லாகி முது பொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்கள் இருண்டு

வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையிலினோர் தடியுமாகியே
வருவது போவ தொருமுது கூனும்
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயறி யாமல் விடாமல் மொழிந்து
தூயில் வருநேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மிழந்து
தோகையர் பாலகர் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவு மிராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
ஏதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசும் என உரைநா
வுறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே
வளர்பிறை போல எயிறும் உரோம
மும்சடை யும்சிறு குஞ்சியும் மிஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாழ்கினரே இவர் கால மறிந்து
பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று
பலரையும் ஏவி முதியவர் தாம்
இருந்த சவம்கழு வும்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை
வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

## திரு ஏகம்பம்

எத்தனைஊர் எத்தனைவீடு எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டுஅழைக்க ஏன்என்றேன் - நித்தம்
எனக்குக் களை ஆற்றாய் ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட்டோ

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலஉண் கடைவாய் படும்முன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலந் தானையே கூறு

## பொது

விட்டுவிடப் போகுது உயிர் விட்டஉட னேஉடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு
எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம் படையாதே - மேவியசீர்
வித்தார மும்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி

ஒன்பதுவாய்த் தோல்பைக்கு ஒருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே அலைந்தாயே - வன்கழுக்கள்
தத்தித்தக் திச்செட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு.

எத்தனைநாள் கூடி எடுத்த சரீரம்இவை
அத்தனையும் மண்தின்பது அல்லவோ - வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகல் அற்றஇடம்
மேலைக் குடிஇருப்போ மே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி இழுத்தஇதழ் - நித்தநித்தம்
பொய்அடா பேசும் புலைமா தரை நீக்கி
உய்அடா உய்அடா உய்

இருப்பதுபொய் போவதுமெய் என்று எண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினைஉன் னாதே - பருத்ததொந்தி
நம்மதுஎன்று நாம்இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம்இருக்கும் தான்.

## அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும்பொழுது பாடியவை

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையல்என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தல் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்துஎடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு

### விருத்தம்

முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே

### வெண்பா

வேகுதே தீஅதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்துஎடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்தென்
தன்னையே ஈன்றுஎடுத்த தாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தடிகள் பாடல்

ஒன்றென் றிருதெய்வ முண்டென்றிருவுயர் செல்வம் மெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்டும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே

என் செயலாவதி யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணர பெற்றேனிந்த வூனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனை வந்து மூண்டதவோ

பிறந்தன இறக்கும். இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும். மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும். சிறுத்தன பெருக்கும்
புணர்ந்தன பிரியும் பிருந்தன புணரும்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே

கல்லாப் பிழையுஞ் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே

பிறவாதிருக்க வரம் பெறல் வேண்டும பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவாதிரு மனமே யதுகாண் மருந்துனக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய -
அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய்
- அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே
- ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா
- ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




* அமரர்களைக் குறிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

கடந்த 25.05.2008 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்ப தெய்வத்தின் மரணச்சடங்கிலும், மற்றும் கிரியைகளிலும் நேரில் பங்குகொண்டு ஆறுதல் கூறித் தேற்றியவர்களுக்கும், மற்றும் தபால், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலரஞ்சலி செய்தோருக்கும், சைவமுன்னேற்றச்சங்கத் தினருக்கும், குறுகிய காலத்தில் இம்மலரை அச்சிட்டுத் தந்த **J. R.** அச்சகத்தினருக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் ஆதரவு தந்த உற்றார், உறவினர்கள், மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணவர், மகள், மகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள்

166 Browning Road
Manor Park
London E12 6PB

+44 208 503 4377





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோகசுவாமிகள் அருளிச்செய்த

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னாலறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவர்க்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

Designed & Printed by JR PRINT LONDON Tel: 020 8503 6643 www.jrprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org